
Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 28 இதழ் - 3 மார்ச் 2015

தனிப்பிரதி
ரூ.10/-



## அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்
## ( மத்தேயு 7 : 16 )

ஜெபியுங்கள் !

பங்குபெறுங்கள் !

# பதினெட்டாம்
# வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

## "திருமறை தியானம்" தொலைக்காட்சி நேயர்கள் & "திருமறை ஆசான்" வாசகர் கருத்தரங்கம்

**இடம் : YMCA வளாகம், ஏலகிரி மலை.**

(வேலூர் மாவட்டம்)

**ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்,**

**ஜோலார்பேட்டை சந்திப்பிலிருந்து சுமார் 22 கி.மீ.**

**திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.**

**நாள் : மே, 4,5, 6, - 2015 ( திங்கள், செவ்வாய், புதன் )**

**பதிவுக் கட்டணம்**

பெரியவர்கள் ரூ. 300 /-

சிறியவர்கள் ரூ. 200 /-

உணவும், தங்குமிடமும் இலவசம்

**ஆசானின் அறிவுரையிலே....**


1. ஆசிரியர் உரை.............................3
2. ஏன் கிறிஸ்து சிலுவையில் .......................11
3. பெண்கள் பகுதி.......................................16
4. வாலிபர் பகுதி...........................................20
5. சிறுவர் பகுதி.............................................23
6. கிறிஸ்து என்னும் மார்க்கம்...................25
7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ...........28
8. நாம் கனிகொடாத........................30
9. கிறிஸ்துவும் அவருடைய சபையும்.........33


### முகாமின் சிறப்பம்சங்கள்

★ கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.

★ தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து வருகை தரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்.

★ ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் வல்லமையான தேவச் செய்திகள்.

★ தேவ பக்தியைத் தூண்டும் ஆவிக்குரிய பாடல்கள்.

★ கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.

★ பெண்கள், வாலிபர்கள், வாலிப பெண்களுக்கென தனித்தனி வகுப்புகள்.

★ சிறு பிள்ளைகளுக்கு சிறப்பு வகுப்புகள். (போட்டியும், பரிசுகளும் உண்டு)

★ **பெண்களுக்கு தனி இடவசதி.**

★ குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு கட்டணத்துடன் கூடிய தனித்தனி அறைகள்

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 28 MARCH - 2015 Issue - 3**


ஆசிரியர் உரை

# இயேசுவைக் கட்டிக் கொண்டுபோனார்கள்

" **மொ**ழிகளுக்குப் பஞ்சமில்லாத பிரபஞ்சத்தில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். தேசத்திற்கு ஒரு மொழி என்று கூட இல்லாமல், தேசத்திலுள்ள ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒரு மொழி, ஒவ்வொரு இனத்திற்கும் ஒரு மொழி என்ற நிலை காணப்படுகிறது. ஒவ்வொரு மொழி பேசுபவர்களும் அந்தந்த மொழிகளில் உள்ள எல்லா வார்த்தை களையும் ஏகமாய் எல்லோருக்கும் அல்லது எல்லாச் சூழ்நிலைகளுக்கும் பயன்படுத்தி விடுவதில்லை. தேவையைக் கருத்தில் கொண்டும், சூழ்நிலையைக் கவனத்தில் எடுத்தும் தான் வார்த்தைகள் அளந்து பயன் படுத்தப்படுகின்றன. அதிலும், குறிப்பாக தடித்த வார்த்தைகளையும், கடுஞ்சொற்களையும் பயன்படுத்துவதில் மிகுந்த எச்சரிக்கை கடை பிடிக்கப்படும். ஏனெனில், தெரியாமல் ஒருசொல் நழுவிவிட்டால் கூட அதற்கான பாதிப்புகளும், விளைவுகளும் சில நேரங்களில் எதிர்ப்புகளும் கடுமையாக இருந்துவிடும். ஆகவே தான், விபரமுள்ளவர்களால் வார்த்தைகள் பொறுக்கி எடுத்து கையாளப்படும். இதுதான் உலகெங்கு முள்ள மொழியாளர்களிடையே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் ஓர் அடிப்படை நியதி.

ஆனால், இந்த நியதி இயேசுவின் காரியத்தில் அப்பட்டமாக மீறப்பட்டிருக்கிறது. நம்முடைய தலைப்பில் இடம்பெற்றிருக்கும் வார்த்தைகளைக் கவனிக்கும்போது. இயேசு ஆண்டவரின் தன்மைக்குச் சற்றும் சம்பந்தமில்லாத வார்த்தைகள் ஈவு இரக்கமின்றி அவரோடு

சம்பந்தப்பட்டிருக்கிறது. கயவர்களுக்கும், திருடர்களுக்கும், கடும் குற்றவாளிகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டிய வார்த்தைகள் தேவக் குமாரனாகிய இயேசு சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்டிருக் கிறது. ஆம், இயேசுவைக் "*கட்டினார்கள்* " என்றும், இயேசுவைக் "*கொண்டு போனார்கள்*" என்றும் ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ளார். ஆவியானவர் தெரியாமல் இந்த வார்த்தைகளை வெளிப்படுத்திக் கொடுக்கவில்லை. இதற்குப் பலமான காரணங்கள் இருக்கவே செய்கின்றன. குறைந்தது இரண்டு காரணங்களை நாம் கொடுக்க முடியும். ஒன்று, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும்படியாக வந்த மாசற்ற தேவ ஆட்டுக் குட்டியாகிய இயேசுவுக்கு நேர்ந்த அவலத்தை நெஞ்சில் ஈரமுள்ள மனுக்குலத்துக்கு அறிவித்து அவர்கள் இருதயத்திலும், ஆவியிலும் ஓர் நெகிழ்ச்சியை ஏற்படுத்துவது. இரண்டு, ஒரு குற்றமும் செய்யாத இயேசுவைப் பாடாயப்படுத்திய கல்நெஞ்சக்காரர்களின் கொடுஞ் செயலை உலகிற்கு வெளிச்சம் போட்டுக்காட்டுவது.

சரி, இப்பொழுது இந்தக் கடும் வார்த்தைகள் சம்பந்தமாகச் சில கூடுதல் தகவல்களுக்காக முயற்சித்துப் பிறகு, தொடர்ந்து மேலே செல்லலாம். சரியா?

முதலாவது, இது சம்பந்தமான வசனங்களைக் கவனிப்போம். "*விடியற்காலமான போது சகல பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் இயேசுவைக் கொலை செய்யும்படி, அவருக்கு விரோதமாக ஆலோசனை பண்ணி, அவரைக் கட்டிக்கொண்டுபோய், தேசாதி பதியாகிய பொந்தியுபிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள் (மத் 27:1,2)* "

அது ஒரு வியாழன் இரவு. இயேசுவானவர் சிலுவையிலறைப் படுவதற்கு முந்தின இரவு. சொல்லப்போனால் உலக சரித்திரத்தின் கறுப்பு இரவு. பரபரப்புக்கும், பதட்டமான சூழ்நிலைகளுக்கும், ஈவு இரக்கமற்ற செயல்களுக்கும், நீதியின் வாடையே இல்லாத நியாய விசாரிப்புகளுக்கும் பஞ்சமே இல்லாத ஓர் இரவு. அப்படிப்பட்ட இரவு முடியும் தருணத்தை நெருங்கின நான்காம் ஜாமம் அது. பிரதான ஆசாரியர், ஜனத்தின் மூப்பர் என்று நியாயக்கேடுள்ள 71 உறுப்பினர் களைக் கொண்ட "*சனகரீம்* " என்ற ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக இயேசு நிறுத்தப்பட்டார். சனகரீம் யூதமதத்தின் காரியங்களைத் தீர்மானிக்கும் ஓர் உயர்மட்ட அமைப்பு. தேவனுடைய வார்த்தைகளின் படியான நீதி பரிபாலனம் செய்யப்பட வேண்டிய அமைப்பு. ஆனால், யதார்த்த நிலை தலைகீழ். இயேசுவின் கூற்றுப்படி சொல்வதென்றால், " கள்ளர் குகையாக " மாறிப்போன சங்கம்.

தலைப்பிலுள்ள வசனத்தை நாம் கவனித்தால். முதலில் இவர்கள் காரண காரியங்களின் படி ஆலோசனை பண்ணி, பிறகு ஆதராங் களின்படி கொலைசெய்யும்படியான முடிவுக்குவராமல், கொலை செய்யும்படியாகத் தீர்மானத்து விட்டு, பிறகு அதற்கான காரணம் தேடி

ஆலோசனை செய்திருக்கிறார்கள். இந்த ஆலோசனை தேவன் மோசேயைக் கொண்டு கொடுத்த பிரமாணங்களின்படி இல்லாமல், தங்களது கட்டுப்பாட்டில் இல்லாத ரோமச்சட்டத்தை தங்கள் இழிவான நோக்கத்திற்கு எப்படி வளைக்கமுடியும் என்பதற்கான ஆலோசனை.

அந்த நான்காம் ஜாம வேளையில் அவர்கள் செய்த ஆலோசனை சிரமமில்லாத ஒன்றாக அவர்களுக்கு இருந்திருக்காது. எப்படியெனில், இயேசு அடுத்து கூட்டிச் செல்லக்கூடிய இடம் பிலாத்துவுக்கு முன். இவன் அகிரிப்பா ராஜா போல் யூதமார்க்கத்தின் காரியங்களை அறிந்தவனல்ல (அப். 26:3) விக்கிரகங்களை வணங்கி வந்தவன். ஆகவே, தேவ காரியங்களின் மேன்மை அவனுக்குப் புரியாது. இவர்களின் வழக்கமான "*தேவதூஷணம்*" என்ற குற்றச்சாட்டென்பதெல்லாம் பிலாத்துவுக்கு முன்பாகவும், ரோமச் சட்டத்துக்கு முன்பாகவும் சுத்தமாக எடுபாடது. போதாததற்கு பிலாத்துவின் பிடிவாத குணம் அன்று ஊர் அறிந்த ஒன்று. ஆகவே, ரோமச் சட்டத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்களைக் கண்டுபிடித்துப் புனைய வேண்டிய கட்டாயம் இவர்களுக்கிருந்தது. இதற்கான ஆலோசனையைத் தான் அவர்கள் நடத்தியிருக்கிறார்கள். எப்பேர்ப்பட்ட புண்ணியவான்கள் பாருங்கள்! இந்தப் புண்ணியவான்கள் நடத்தியது பச்சையான சதியாலோசனை.

இந்த நீதிப் பிரியர்களின் உத்தரவின் பேரில் தான் இயேசு அங்கே கட்டப்பட்டார். அந்நாட்களில் கட்டுவது என்பது இந்நாட்களில் விலங்கிடுவதற்குக் கிட்டத்தட்ட சமம். அந்நாட்களில், ரோம ஆளுநர்களுக்கு முன்பாக ஒரு கடும் குற்றவாளியைக் கொண்டு போகும்போகும்போது கட்டப்பட்ட நிலையில் கொண்டுபோவது ஒரு மரபு. அது மரபு மாத்திரமல்ல, அதிலே இன்னொரு செய்தியும் அடங்கியிருந்தது. அதாவது, இந்தக் குற்றவாளி ஏற்கனவே விசாரிக்கப்பட்டு "*குற்றவாளி* " என்று தீர்க்கப்பட்டிருக்கிறார். இப்பொழுது கனம் பொருந்திய ஆளுநர் அதை உறுதி செய்தால்போதும் என்று சொல்லாமல் சொல்வது. இயேசுவுக்கு நீதி கிடைக்கும்படியாக விசாரணைக்கு அவர் கொண்டு செல்லப்படவில்லை. மாறாக, அநீதி உறுதி செய்யப்படும்படியாய் கொண்டு செல்லப்பட்டுள்ளார். எப்படியென்று பாருங்களே! மனம் குமுறவில்லையா உங்களுக்கு? இப்படியுமா செயல்படுவார்கள்!!

விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்த மாசற்ற தேவ மைந்தனாகிய இயேசு, பரிசுத்த ஆவியினாலே உற்பவிக்கப்பட்ட இயேசு, கன்னி மரியாளிடத்தில் பிறந்த இயேசு, பெலஸ்தீனா தேசமெங்கும் நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்த இயேசு பரலோக ராஜ்யமாகிய சபையைக் குறித்து கூவிக்கூவி பிரசங்கித்த இயேசு விலங்கிடப்படுவதற் கேதுவான எந்த ஒரு குற்றத்தையும் ஒருபோதும் செய்யவில்லை. ஆயினும். அவரை விலங்கிட்டுக் கொண்டு சென்றுள்ளார்கள். இதைப் படிக்கும்போது சொல்லொணாத் துக்கம் மாத்திரம் மேலோங்காமல், கோபமும்

கூட கொப்பளித்து வருகிறது. அப்படித் துக்கமும், கோபமும் உங்களுக்கு வருமானால், அந்தத் துக்கத்திலும், கோபத்திலும் கண்டிப்பாக நியாயம் உண்டு.

ஆனால், அருமையானவர்களே, இதையே வேறு வகையாகச் சிந்திப்போமானால், அன்றைக்கு இயேசுவுக்கு நடந்த அந்தக் கொடுமை அதாவது, இயேசுவின் கைகளைக் கட்டுகிற கொடுமை, இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறதென்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். எப்படியெனில், மேசியாவாகிய இயேசு வந்ததின் நோக்கத்தைச் சுத்த மாகப் புரிந்து கொள்ளாமல், அவருடைய வல்லமையான ஊழியத்தின் மேன்மையை எவ்வகையிலும் அங்கீகரியாமல் இயேசுவின் கைகளை அநியாயமாய் அவர்கள் கட்டினதுபோல், இன்றைக்கு உள்ள உலகத்து மக்களும், கிறிஸ்தவ சமுதாயமும், கிறிஸ்தவர்களும் இயேசுவின் உபதேசத்தை ஏற்றுக்கொள்ளாமல் அவருடைய கைகளைக் கட்டு கிறவர்களாக உள்ளார்கள். ஆகவே, எந்தெந்த வகைகளில் உலகமும், கிறிஸ்தவ சமுதாயமும், கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்களும் இயேசுவின் கைகளைக் கட்டுகிறவர்களாக இன்றைக்கு உள்ளார்கள் என்று நாம் கவனித்து,நமக்கான பாடங்களைக் கற்றுக்கொள்ள நம்மை ஒப்புக் கொடுப்போம்.

## I. உலகமானது, கிறிஸ்துவின் நற்செய்தியை ஏற்றுக்கொள்ளாமல்......

கொடுமைக்காரர்கள் இயேசுவின் கைகளைக் கட்டிக் கொண்டு போனார்கள் என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், உலகமானது கிறிஸ்துவின் நற்செய்தியை ஏற்றுக்கொள்ளாமல் இயேசுவின் கைகளைக் கட்டிப்போடும் படுபாதகச் செயலைச் செய்துகொண்டுள்ளது என்பது.

உலக மக்களில் கணிசமான பேர் இயேசு ஆண்டவரை தங்கள் அறிவின்படியான பார்வைகொண்டு பார்கிறார்கள். ஒரு சாரார், இயேசு ஒரு குறிப்பிட்ட இனத்துக்காக, அதாவது, யூத மக்களுக்காக வந்தவர் என்று பார்க்கிறார்கள். வேறொரு சாரார், இயேசுவை மேலைநாட்டு மக்களின் மதத் தலைவராகப் பார்க்கிறார்கள். இன்னொரு சாரார், இயேசுவை சில குறிப்பிட்ட சமுதாயத் தலைவர்களால் வழிபடுபவராகப் பார்க்கிறார்கள். இன்னும் வேறு சிலர், இயேசுவை மகான்களில், ஒருவராக, சமுதாய சீர்தருத்தவாதியாக, உயர்ந்த கருத்துக்களைப் போதித்தவராக என்று விதவிதமாகப் பார்க்கிறார்கள். ஆனால், இயேசு இப்படி கூறுபோட்டுப் பார்க்கப்பட வேண்டியவர் அல்ல.

இயேசுவையும், அவருடைய காரியங்களையும் தப்புத் தப்பாகப் பார்ப்பது ஏதோ 21 ம் நூற்றாண்டின் விபத்து என்று நாம் எண்ண வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், அவர் வாழ்ந்த காலத்தைச் சார்ந்த மக்களே கூட, அதாவது அவருடைய ஊழியத்தின் உண்மையையும், அற்புதத்தின் வல்லமையையும் நேரில் கண்டவர்களே அவரை

அவரை சரியாகக் கணிக்க முடியாமல் தடுமாறியிருக்கிறார்கள் (மத். 16:13,14). ஆகவே, இக்காலத்து மனிதர்களின் கூற்றைக் குறித்து ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆயினும், இயேசு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட போது, அவர் யார் என்கிற உண்மை வெளிப்படுத்தப் பட்டதை நாம் காணத் தவறிவிடக்கூடாது. ஆம், பரலோகத்திலிருக்கிற பிதாவால் *" இயேசு ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து "* என்று அறிவிக்கப்பட்டார் (மத் 16:16,17).

அதுமாத்திரமல்ல, இயேசுவின் பிறப்பை முன்னறிவித்த *"தேவதூதன் " இதோ " எல்லா ஜனத்துக்கும் "* மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் (லூக்கா 2:10) என்று முன்னுரைத்தாரே தவிர யூதஇனம், வெள்ளை இனம், குறிப்பிட்ட இனம் என்றெல்லாம் எதுவும் சொல்லவில்லை. மேலும், இயேசு ஊழியம் செய்த நாட்களில் அவருக்கு முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானகன் *" இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி"* (யோவான் 1:20) என்று அறிவித்தாரே தவிர, ஒரு குறிப்பிட்ட சாராருக்கு என்று எதுவும் கூறவில்லை.

இந்த தேவ ஆட்டுக்குட்டியான இயேசுவானவர் தான், மொழி, நிறம், மதம், இனம் என்று எந்தப் பாகுபாடும் பார்க்காமல், *"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் "* (மத் 11:28) என்று ஏகமாய் அழைக்கிறார். இப்படித் தன்னுடைய கரங்களை விரித்து, நீட்டிக் கொடுக்கும் அழைப்பு எல்லாருக்கும் பொதுவானது. உலகத்தாருடைய பாவங்களை நீங்கும் வல்லமை இயேசுவின் இரத்தத்திற்கு மாத்திரமே உண்டு. இது குறித்து யோவான் அப்போஸ்தலன், *" அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் "* (1 யோவான் 1:7) என்று கூறியுள்ளார். இப்பேருண்மையைத்தான் பேதுரு அப்போஸ்தலன் இங்ஙனம் வெளிப்படுத்துகிறார். *" அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தில் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான் "* (அப். 4:12)

ஆகையால், அருமையானவர்களே! நாம் யாராக இருந்தாலும், எந்த மதத்தைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தாலும், நம்முடைய ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கொடுக்கும், நம்முடைய பாவ வாழ்க்கைக்கு இரட்சிப்பை அருளும் இயேசுவின் அழைப்பை நாம் ஏற்றுக்கொண்டு, அவருடைய உபதேசத்துக்கு நம்மை முற்றும் கீழ்ப் படுத்த வேண்டும். அதன் மூலம் நம்முடைய இம்மையின் வாழ்வு ஆசீர் வதிக்கப்படும். மறுமையின் வாழ்வு நம்பிக்கையுடைதாக மாறும். ஒரு வேளை ஏதாவது காரணத்தினிமித்தம் நாம் இயேசுவின் இரட்சிக்கும் நற்செய்தியை ஏற்றுக்கொள்ள மறுப்போமானல், இயேசுவின் கைகளை மீண்டும் கட்டுகிற பாதகச் செயலுக்கு நாம் பங்காளிளாக மாறி விடுவோம்.

## II. கிறிஸ்தவமானது, கிறிஸ்து கட்டின சபையை ஏற்றுக்கொள்ளாமல்....

கொடுமைக்காரர்கள் இயேசுவின் கைகளைக் கட்டிக் கொண்டு போனார்கள் என்பதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டிய இரண்டாம் பாடம், இன்றைய கிறிஸ்தவமானது கிறிஸ்து கட்டின ஒன்றான மெய் சபையை ஏற்றுக் கொள்ளாமல், இயேசுவின் கைகளைக் கட்டிப்போடும் படுபாதகச் செயலைச் செய்துகொண்டுள்ளது என்பது.

இங்கே நான் கிறிஸ்தவம் என்று கூறுவது, உலகெங்கிலுமுள்ள ஒட்டுமொத்த கிறிஸ்தவ சமுதாயத்தை உள்ளடக்கிய ஒரு வார்த்தை. இதில் கிறிஸ்தவத்தோடு சம்பந்தப்பட்டுள்ள அனைத்துப் பிரிவினரும், அதாவது ரோமன் கத்தோலிக்கர்கள், புராட்டஸ்டண்டுகள், பெந்தெகொஸ்தே கூட்டத்தார் போன்றவர்களும், அவைகளுக்குள்ளாக இருக்கும் எண்ணிலடங்கா உட்பிரிவினரும் அடக்கம். எல்லாப் பிரிவுகளையும், உட்பிரிவுகளையும் பட்டியலிட நேரமில்லை, அதற்கான அவசியமுமில்லை இவர்களெல்லாரும் தங்களை அடையாளப் படுத்து வதற்காக விதவிதமான பெயர்களையும், விநோதமான பெயர்களையும் வைத்துக் கொள்ளுகிறார்கள். இவைகளுக்கான தேவவசனங்களின் படியான ஆதாரங்களைப் பூத கண்ணாடி வைத்துத் தேடினாலும் கண்டுபிடிக்க முடியாது. ஆனாலும், அவைகளை உடும்புப் பிடியாகப் பிடித்து, கிட்டத் தட்ட ஒட்டுமொத்த கிறிஸ்தவமும் தொங்கிக் கொண்டுள்ளது. இவர் களைப் பொறுத்தளவில் சபையும், சபைப் பெயரும் முக்கியமல்ல. மாறாக, ஒரு நல்ல கிறிஸ்தவனாக வாழ்வதுதான் முக்கியம் என்று முழங்குகிறார்கள். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது இதில் தவறு இருப்பதுபோல் தோன்றாது. மிகப் பெரும் பாலோருக்கு இக்கருத்து மிகவும் பிடித்தமானதாகவும் இருக்கிறது. ஒருவேளை, நித்திய வாழ்வு என்பது நம்முடைய விருப்பத்தையும், பெரும்பான்மையையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்குமானால் இக்கருத்தை ஏற்றுச் செயல்படுவதில் தவறேதுமில்லை. ஆனால், இயேசு ஆண்டவர், *"....நான் சொன்ன வசனமே ஒருவனைக் கடைசி நாளில் நியாயந் தீர்க்கும்"* (யோவான் 12:48) என்றுதான் எச்சரித்துள்ளார். இதை நாம் லேசில் எடுத்துக் கொள்ளமுடியாது.

இன்னொன்றையும் நாம் கவனித்தாக வேண்டும். வேத வசனங் களுக்கு மாறாக ஒரு நம்பிக்கை நாம் ஏற்படுத்து வோமானால் அதில் இன்னொரு ஆபத்தும் அடங்கியுள்ளதை அறிந்துகொள்ளவேண்டும். ஆம், தேவனுக்கும். இயேசுவுக்கும் தெரியாத ஒன்று எங்களுக்குத் தெரிந்திருகிறதென்று நாம் சொல்லுகிறவர்களாக மாறிவிடுவோம். எப்படியெனில் *" சபை முக்கியமல்ல "* பெரும்பான்மை கருத்தை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். எபே. *3:4, 10* ம் வசனங்கள் சபையானது தேவனுடைய ஞானத்தின்படியானதென்றும், தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியானதென்றும், திட்டமாகக் கூறுகிறது. இயேசுவானவர் சபையைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்வதற்குத் தன்னுடைய ஒரே பேறான குமாரனை அனுப்பிக்கொடுத்தார் (யோவான் *3:16*). உண்மைநிலை இப்படி இருக்கும்போது, சபை முக்கியமல்ல என்று

எப்படி இன்றைய கிறிஸ்தவம் சொல்லுகிறது. சர்வவல்ல தேவனையும், இயேசு கிறிஸ்துவையும்விட இவர்கள் அறிவாளிகளா? இப்படியெல்லாம் சொல்லக் கேட்கும்போது தலையே சுற்றுகிறது. எப்படித் தான் புரிய வைப்பது என்று தெரியவில்லை!

அன்பானவர்களே, இயேசுவானவர் பூமிக்கு வந்தது பாவிகளை இரட்சிக்க (லூக்கா 19:10). அப்படி இரட்சிக்கப்பட்டவர்கள் எங்கே சேர்க்கப்பட்டார்கள்? அப். 2:47-ன் படி, சபையில்தான் சேர்க்கப் பட்டார்கள். ஆக, இயேசு பூமிக்கு வந்தது சபைக்காகத்தான். இயேசுவின் ஊழியம் சபை பற்றித்தான். ஆம், மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபம் என்று தான் பிரசங்கித்தார் (மத். 4:17).

பரலோக ராஜ்யம் என்பதும், சபை என்பதும் ஒன்று தான் (மத். 16:18,19). ஆக இயேசுவின் ஊழியம் சபை பற்றியது. இயேசு இரத்தம் சிந்தி மரித்தது சபைக்காக (அப். 20:28). இயேசு மறுபடியும் வரும் போது ராஜ்யமாகிய சபையைப் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கப் போகிறார் (1 கொரி. 15:24). இப்படி, இயேசு வந்தது, வாழ்ந்தது, மரித்தது, மறுபடியும் வரப்போவது என்று எல்லாமே சபைக்காக இருக்கும்போது, சபை முக்கியமல்ல என்று நாம் எப்படித் துணிந்து சொல்லமுடியும்? இது இயேசுவின் ஒட்டுமொத்தக் காரியங்களை அவமதிப்பதாகாதா? சொல்லுங்கள். கண்டிப்பாக சபை முக்கியம், முக்கியம், முக்கியம். தப்புக்கணக்குப் போட்டுத் தேவ கோபத்திற்கு ஆளாகிவிடாதீர்கள்.

### III. கிறிஸ்தவர்கள், தங்களை மறுரூபமாக்கிக் கொள்ளாத பட்சத்தில்...

கொடுமைக்காரர்கள் இயேசுவின் கைகளைக் கட்டிக் கொண்டு போனார்கள் என்பதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய இன்னு மொரு பாடம், சத்தியத்தின்படியான கிறிஸ்தவர்கள் தங்களை மறு ரூபமாக்கிக் கொள்ளாமல், இயேசுவின் கைகளைக் கட்டிப்போடும் படுபாதகச் செயலைச் செய்துகொண்டுள்ளார்கள் என்பது.

கிறிஸ்தவம், கிறிஸ்தவர்கள் என்று இரண்டு வேறுபட்ட வார்த்தைகள் பயன்படுத்தப்படுவதை நீங்கள் கவனித்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். மேலேழுந்தவாரியாகப் பார்க்கும்போது இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய நெருக்கமான வார்த்தைகள் போல் தோன்றும். ஆயினும், அவைகள் மாறுபட்ட பொருளைக் கொடுக்கும் தூரமான வார்த்தைகளும் கூட. கிறிஸ்தவம் என்பது ஒன்றான மெய் தேவனையும், அவருடைய குமாரனையும் அறிந்து கொண்டு, அதே வேளையில் அவர்களுடைய சித்தம் பற்றிய அறிவில்லாமல் வேதாகமத்தைக் கையிலே வைத்துக்கொண்டு அதில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை களைப் பற்றிய புரிந்து கொள்ளுதலில்லாமல் தங்களையும் கிறிஸ்தவர்களாகப் பாவித்து வாழ்வது.


ஆனால், நான் கூறும் " கிறிஸ்தவர்கள் " என்னும் வார்த்தை அப்போஸ்தலர் 11:26 ன் படியானது. ஆம், முதல் நூற்றாண்டுக் காலத்தில் சபையானது எருசலேம் நகரில் ஆரம்பிக்கப்பட்டு ஒரு பத்து

ஆண்டுகளுக்கும் மேலான நிலையில், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குத் தங்களை முற்றிலுமாகக் கீழ்ப்படுத்தி, கிறிஸ்துவின் உபதேசப்படி மெய் பக்தி வாழ்க்கை வாழ்ந்து, பரலோகத்தின் தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதித்து வந்த சீடர்களுக்கு, சர்வ வல்லவரால் கொடுக்கப்பட்ட நாமம் தான் " *கிறிஸ்தவர்கள்* " என்பது. உண்மையைச் சொல்லப்போனால் இவர்கள் தான் கிறிஸ்தவர்கள். இன்றும் இவர்கள் ஏற்றுக்கொண்ட அதே உபதேசச் சட்டத்துக்கு அட்சரம் பிசகாமல் அப்படியே கீழ்ப்படிந்து வாழ்பவர்கள்தான் கிறிஸ்தவர்கள். ஆனால், நடைமுறையில் உள்ள கிறிஸ்தவம் அப்படிப்பட்டதல்ல. ஆகவே தான், உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் கிறிஸ்தவத்திற்கும், வேதவசனங்கள் வலியுறுத்திக் கூறும் கிறிஸ்தவர்களுக்கும் வேறுபாடு உண்டு என்று நான் வலியுறுத்தி வருகிறேன்.

சரி, இப்படி கிறிஸ்தவர்கள் என்று நாமம் தரிக்கப்பட்டவர்கள் தங்களை மறுரூபமாக்கிக் கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அப்போஸ்தலன் பவுலடியார் உரோமையருக்கும், எபேசியருக்கும் எழுதின நிருபங்களில் இதைக் கோடிட்டுக் காட்டியுள்ளார். *"....உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்* " என்றும் (ரோமர் 12:2). " *முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு, உங்கள் உள்ளத்தில் புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்* " (எபே. 4:22-24) என்றும்.

மறுரூபம் என்பதும், தேவசாயல் என்பதும் ஒன்று தான். இந்த தேவசாயல் கெட்டுப்போகிற பழைய மனுஷனைக் களைந்து போடுவதன் மூலமும், மெய்யான நீதியையும், பரிசுத்தத்தையும் பெற்றுக்கொள்வதின் மூலமும் வருகிறதாக உள்ளது. இப்படி மறுரூபமாகி, தேவசாயலைக் பெற்றுக்கொள்வதற்கு வேத வசனங்களைப் படிப்பதும், அதைத் தியானிப்பதும் அவசியம் (1 பேதுரு *1:23* ,*2:2*; பிலி. *4:8*). இது சாத்தியம் என்று வேத வசனங்கள் கூறுகிறது. இல்லையென்றால், " *உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்* " (I பேதுரு *1:15*) என்னும் வசனங்களைளெல்லாம் ஆவியானவர் வெளிப்படுத்திக் கொடுத்திருக்க மாட்டார். அப்படியானால், புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படியான கிறிஸ்தவர்களே, தேவனுடைய எதிர்பார்ப்பின்படி நீங்கள் ஒவ்வொருவரும் மறுரூபமாக்கப்பட்டவர்களாகவும், தேவ சாயலைப் பெற்றவர்களாகவும் வாழ்ந்து கொண்டுள்ளீர்களா? சொல்லுங்கள். உங்களை நீங்களே சோதித்துப் பாருங்கள். அப்படி மறுரூபமாக்கப்படவில்லையென்றாலோ அல்லது தேவசாயலைப் பெற்றுக்கொள்ளும்படியான முயற்சி இல்லாமலோ போகுமானால், ஒன்றை நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் இயேசுவின் கைகளைத் திரும்பக் கட்டுகிறவர்களாகவே இருப்பீர்கள். அப்படிப்பட்ட பாவச் செயல் நமக்கு வேண்டவே வேண்டாம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதித்துக் காத்து வழிநடத்துவாராக! ஆமென்!!



# ஏன் கிறிஸ்து சிலுவையில் மரித்தார்?

**Bro. J.C. சோட்**

**ஆ**தியில் தேவன் ஆணையும், பெண்ணையும் உண்டாக்கினபோது, அவர்கள் பூரணமாகவும், பாவமில்லாதவர்களாகவும் இருந்தனர். ஆனால், அவர்கள் நீண்ட காலத்திற்கு அந்தத் தூயநிலையில் இருக்கவில்லை. சீக்கிரமாகவே அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போய், ஆவிக்குரிய பிரகாரமாய் மரித்து பாவத்தின் விளைவுகளை அனுபவிக்கும்படியாக அந்த அழகான ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள். பாவத்தின் விளைவால் தான் மனிதன் புசிப்பதற்கும், பிழைப்பதற்கும் தன் நெற்றி வியர்வையை சிந்த வேண்டியதாயிருக்கிறது. அதுபோலவே, ஒரு பெண், பிள்ளைப் பேற்றின் போது மிகுந்த வேதனையை அனுபவிக்க வேண்டியதாயிருக்கிறது; அத்தோடு, அவர்கள் சரீர மரணத்தையும் சந்திக்க வேண்டியதாயிற்று (ஆதி. 1-3). பாவம், தேவனுக்கும், மனிதனுக்கும் இடையில் வந்தபடியால் இப்போது மனிதன் தேவனுடைய சத்துருவாகிவிட்டான்.

மனிதன் தன் பழைய நிலைக்குத் திரும்பிப் போக முடியாமற் போனதினாலும், மிருக பலிகள் அவன் பாவங்களை நிரந்தரமாக எடுத்துப் போடமுடியாமற் போனதினாலும், தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உலகத்தின் பாவத்திற்காக பூரண பலியாகவும், மனிதன் தேவனிடம் திரும்பும்படியாக, மனிதனுக்கும், தேவனுக்கும் இடையில் மத்தியஸ்தராக இருக்கும்படியாகவும் அனுப்பி வைத்தார் (எபி. 10:4; ஆதி. 3:15). எனவே, ஏற்ற காலத்தில் தேவன் தம்முடைய குமாரனை உலகத்திற்கு அனுப்பி கன்னி மரியாளிடம் பிறக்கும்படி செய்தார். தேவ தூதன் மரியாளுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த யோசேப்புக்கு தரிசனமாகி, *"அவள் ஒரு குமாரனைப்பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில், அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்"* என்றான் (மத். 1:21).

வேதவசனங்களில் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிறபடியும், தீர்க்கதரிசனங்களில் முன்னுரைக்கப்பட்டபடியும் இயேசு இந்த உலகத்திற்கு வந்தார் என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், ஆச்சரியவிதமாக, தேவன் அவரை நமக்காக மரிக்கும்படியாக அனுப்பிக் கொடுத்தார். நாம் இப்படியாக வாசிக்கிறோம். *"தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில்*

*அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்"* (யோவான் *3:16,17*). தேவன் தமது குமாரனை மரிப்ப தற்கு மட்டும் அனுப்பாமல் பாவங்களுக்காகவும், தேவ பக்தியற்றவர் களுக்காகவும், துன்மார்க்கருக்காகவும் மரிக்கும்படியாக அனுப்பி வைத்தார். பவுல் இப்படிச் சொன்னார், *"அன்றியும் நாம் பெலனற்றவர் களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்"* (ரோமர் *5:6-8*). கிறிஸ்து தமது சீடர் களிடம் இப்படிச் சொன்னார். *" நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னு டைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலு மில்லை* (யோவான் *15:12,13*) என்று. மேலும், *நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது"* என்று (I யோவான் *4:9,10*).

கிறிஸ்து இந்த உலகத்தில் இருந்தபோது அவர் நன்மை செய்கிற வராகச் சுற்றித் திரிந்தார். வியாதிகளை சுகப்படுத்தினார், குருடர்கள் பார்வையடையும்படி செய்தார், மரித்தோரை உயிரோடு எழுப்பினார், தான் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்டவர் என்பதை நிரூபிக்கும்படி அநேக அற்புத அடையாளங்களைச் செய்தார். யோவான் அப்போஸ்தலன் இப்படி எழுதியுள்ளார். *" இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படி யாகவும் விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது "* (யோவான் *20:30,31*).

இப்படி, நன்மை செய்கிறவராக இந்த உலகத்தில் சுற்றித் திரிந்த இந்த நல்ல மனிதர், பாவமில்லாத இந்த நல்ல மனிதர், தேவனுடைய குமாரனாகிய இவர், இந்த உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார். பவுல் சொன்னார். *"அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது, சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப் படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார் "* (பிலி. *2:8*) என்று. பேதுரு இப்படியாக அறிவித்தார், *" இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக் கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார். அவர் பாவஞ் செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப் படும் போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும்,*

நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். I பேதுரு 2:21-23). வேத வாக்கியங்களின்படி நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார் என்று பவுல் சொன்னார் (I கொரி. 15:3).

ஆனால், கிறிஸ்து ஏன் சிலுவையில் அறையப்பட்டார்? அதாவது, ஒரு நல்ல மனிதரைக் கொலை செய்ய யார் விரும்புவர்? அவர் மனிதனை இரட்சிக்க வந்திருந்தாலும், பாவ மனிதனின் காரியங்களைச் சரி செய்ய வேண்டியதாயிருந்தது. தேவனுடைய பிரதிநிதிகளைப் போலிருந்த ஆசாரியர்கள், வேதபாரகர்கள், பரிசேயர்கள், சதுசேயர்கள் போன்றோர் மனித உபதேசங்களுக்கும், கற்பனைகளுக்கும் பின் சென்றபடியால், அவர்கள் பொறாமையினாலும், துன்மார்க்கத்தினாலும் நிறைந்து காணப் பட்டார்கள். "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை" என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது (யோவான் 1:11). இயேசு சொன்னார் "அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடதில் வர உங்களுக்கு மனதில்லை" (யோவான் 5:40).

கர்த்தருடைய சபை ஸ்தாபிக்கப்பட்ட பெந்தெகொஸ்தே நாளில் திரளாகக் கூடியிருந்த யூதர்களிடத்தில் பேதுரு இப்படியாகப் பேசினார். "இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயத்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும், ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக் காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள். தேவன் அவருடைய மரண உபாதைகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது" (அப். 2:22-24). பிலாத்துவினால் விசாரிக்கப் படும்படி இயேசு கொண்டு வரப்பட்டபோது, பொறாமையினாலே பிரதான ஆசாரியர்கள் அவரை ஒப்புக் கொடுத்தார்களென்று பிலாத்து அறிந்து கொண்டான் (மாற்கு 15:9). இப்படியாக, கிறிஸ்துவுக்கு அநியாயமான தீர்ப்பு வழங்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார். அக்கிரமக்காரரால் அவர் அடிக்கப்பட்டு, பரியாசம் செய்யப்பட்டு கோரக்குருசில் ஆணிகளால் கடாவப்பட்டு, இரண்டு கள்ளர்கள் மத்தியில் தொங்கவிட்டு, அப்படியே மரிக்கும்படி அவர் அங்கேயே விடப்பட்டார். பின்பு அவரை சிலுவையிலிருந்து இறக்கித் துணிகளால் சுற்றி, ஒரு கல்லறையிலே அடக்கம் பண்ணி, அதன் வாயிலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வந்து வைத்தார்கள். தான் மரித்தால் மூன்று நாட்கள் கழித்து, தான் உயிரோடு எழுவேன் என்று இயேசு வாக்களித் திருந்தார் (யோவான் 14:10) அதன்படி, மூன்று நாட்கள் கழித்து உயிர்த் தெழுந்த கர்த்தராக கல்லறையிலிருந்து இயேசு வெளியே வந்தார். (யோவான் 14:10) மூன்றாம் நாள் காலையில், ஸ்திரீகள் அவருடைய

கல்லறையைக் காண வந்தபோது, தேவதூதன் அவர்களுக்கு முன்பாகத் தோன்றி இப்படிச் சொன்னார். அவர் இங்கே இல்லை; தாம் சொன்ன படியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள் என்று (மத். *28:6*). அதன்பின்பு, சீடர்களுக்கு முன்பாகவும், ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் தரிசனமாகி பிறகு, ராஜாதி ராஜா வாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் அரசாட்சி செய்யும்படி பரலோகத்தில் இருக்கிற பிதாவினிடத்திற்கு ஏறிச் சென்றார் (I கொரி. *15:18*; அப். *1:1-11*) இன்றளவும் அவர் பரலோகத்தில் தான் இருக்கிறார்.

இப்போது, மீண்டும் அதே கேள்விதான், சிலுவையில் - கிறிஸ்து ஏன் மரித்தார்? அவர் மரித்ததற்கு அநேகக் காரணங்கள் இருந்தாலும், நிச்சயமாகவே அவைகளில் பிரதான காரணம், மனிதன் இரட்சிக்கப் படும்படியாகத்தான். அத்தோடு, கிறிஸ்து தம்முடைய மரணத்தைக் குறித்து உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் நிறை வேறும்படியாகவும் சிலுவையில் மரித்தார் (ஏசாயா *53*; அப்.*8*). பழைய பிரமாணத்தை எடுத்துப் போட்டு, புதிய பிரமாணத்தைத் தரும்படியாக மரித்தார் (கொலோ. *2:14*; யோவான் *1:17*; மத். *26:28*). தம் இரத்தஞ் சிந்துத லினால் மனிதனுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும்படி மரித்தார் (எபே. *1:7*; அப். *22:16*). சபை ஸ்தாபிக்கப்படும்படியாக அவர் மரித்தார் (எபே. *5:25*), இரட்சிக்கப்பட்டவர்களுக்கு நித்திய ஜீவனின் நம்பிக்கையைக் கொடுக்கும்படி கிறிஸ்து சிலுவையில் மரித்தார். (II தெச. *2:16*).

உலகத்தை இரட்சிக்கும்படியாக கிறிஸ்து சிலுவையில் மரித்த போதிலும், நம்மைச் சுற்றிலும் இருக்கின்ற பெரும்பாலான மக்கள் இழந்து போன நிலையில் தான் இருக்கிறார்கள். ஏன்? இதற்கு அநேக காரணங்கள் உண்டு. பெரும்பாலோர் தேவனுடைய சித்தத்தைக் குறித்து அறியாமல் இருக்கிறார்கள். தான் கிறிஸ்தவனாவதற்கு முன்பு அறியாமையால் தான், சபையைத் துன்பப்படுத்தியதாக பவுல் கூறியுள்ளார் (I தீமோ. *1:13*). சிலர் ஒழுக்கமுள்ள வாழ்க்கை தங்களை இரட்சிக்கும் என தங்கள் பேரில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால், கொர்நேலியும், அவன் வீட்டாரும் நல்லவர்கள் தான், ஆனாலும் அவர்கள் இரட்சிக்கப்பட கர்த்தருக்குக் கீழ்ப்படிவது அவர் களுக்கு அவசியமாயிருந்தது (அப். *10*-ம் அதிகாரம்). சிலர் தேவனால் புகழப்படுவதைக் காட்டிலும், மனுஷரால் புகழப்படுவதை அதிகமாக விரும்புகிறார்கள். கிறிஸ்துவானவர் தன்னை விசுவாசிப்பதால் மதத் தலைவர்களால் தாங்கள் நிராகரிக்கப்படுவோமோ என்று பயந்து தன்னை அறிக்கை செய்யாத சிலரைப் பற்றி பேசியிருக்கிறார். பின்பு, அவர்கள் ஏன் தன்னை அறிக்கை செய்யமாட்டார்கள் என்று விளக்க மளித்தார். “*அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்* ” (யோவான் *12:43*) என்று. ஆம், இதுபோன்று நம்முடைய நாட்களிலும் அநேகர் இருக் கிறார்கள். இன்னும் அநேகர், மத சம்மந்தமான காரியங்களில் வஞ்சிக் கப்படுகிறார்கள். யோவான் இப்படிப்பட்ட நிலைகுறித்து எழுதியுள் ளார். “*பிரியமானவர்களே, உலகத்தில் அநேக கள்ளத் தீர்க்கதரிசிகள்*

தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள் " (1யோவான். 4:1). இன்றும் அநேகக் கள்ளத் தீர்க்கதரிசிகள் இருக்கிற படியால், அநேகர் தவறான பக்திப் பாதையில் வழி நடத்தப்படுகிறார்கள். கடைசியாக, வேறு அநேகர் உலகத்தில் அன்புகூர்ந்து, மாம்சத்தின் கிரியைகளை அனுபவிக்கிறார்கள். ஆனால், இதில் இருக்கிற ஒரே பிரச்சனை என்னவென்றால், உலகத்திலும், " உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார் " (1யோவான் 2:15) மாம்சத்தின் கிரியைகள் நம்மை மரணத்திற்கு வழி நடத்துகிறது (கலா. 5; ரோமர் 6:23).

என் நண்பர்களே, நீங்கள் இரட்சிக்கப்படும்படி கிறிஸ்து உங்களுக்காக மரித்தார் என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் இரட்சிக் கப்படுவதற்கு ஒரே வழியாகவும், உங்களுக்கு நம்பிக்கையை தரக்கூடிய ஒரே ஒருவராகவும் இயேசு இருக்கிறபடியால் நீங்கள் அவரை நிராகரிக்கவோ, மறுக்கவோ வேண்டாம். நீங்கள் அவரை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, அவரை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும் போது, அவர் உங்களை இரட்சித்துத் தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார். நீங்கள் அவரிடத்தில் உண்மையுள்ளவர்களாயிருந்தால், ஒரு நாளில், பரலோகத்தில் உங்களுக்கு ஒரு நித்தியமான வீட்டைத் தருவார். (மாற்கு 16:16; மத்தேயு 10:32; அப். 2:38,47; வெளி. 2:10). ❀

## கலாத்தியரில் ஆவிக்குரிய மனுஷன்

- ஆவிக்குரியவன் விழுந்து போன சகோதரனை சீர்பொருந்தச் செய்கிறவன் (6:1)
- ஆவிக்குரியவன் மற்றவர்கள் தங்கள் பாரத்தை சுமக்க சந்தோஷமாக உதவுபவன் (6:2)
- ஆவிக்குரியவன் தன்னை ஒருபோதும் ஒரு பொருட்டென்று எண்ணாதவன் (6:3)
- ஆவிக்குரியவன் தன் பாரத்தை தானே சுமப்பவன் (6:5)
- ஆவிக்குரியவன் திருவசனத்தை உபதேசிக்கிறவனுக்கு சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுப்பவன் (6:6)
- ஆவிக்குரியவன் விதைப்பு, அறுப்பு விதியை சரியாகப் புரிந்து கொள்பவன் (6:7)
- ஆவிக்குரியவன் நன்மை செய்வதில் சோர்ந்து போகாமலும், தளர்ந்து போகாமலும் இருப்பவன் (6:9)

பெண்கள் பகுதி

# குடும்பங்களின் இன்றைய அத்தியாவசியத் தேவைகள்

**Sis. R. R. NAYAGAM**

முதலாம் நூற்றாண்டில் நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்தமான விருந்தாளியாக பல வீடுகளுக்குச் சென்றுள்ளார். அவர் சென்ற எல்லா வீடுகளுமே தேவையில் இருந்தது. தேவகுமாரன் அந்தத் தேவைகளை சந்தித்தார். அதே இயேசு கிறிஸ்து இன்றைக்கு நம்முடைய சுகவீனம், பிரச்சனைகள், தீர்வுகள் போன்றவற்றிக்கும் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். உண்மைச் சூழ்நிலை என்னவெனில் எல்லா குடும்பங்களுமே பற்பல தேவைகளில் இருக்கிறது. ஆனால் குடும்பங்களுக்கு குடும்பம் தேவைகள் வித்தியாசப்பட்டிருக்கிறது. இது எப்படி உண்மையெனில், சில குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை மையாக வைத்து அவரைச் சுற்றி தங்கள் காரியங்களை மேற்கொள்கிறார்கள். மற்றவர்கள் தங்கள் குடும்பத்தில் இயேசுவை வெளியே ஒதுக்கி வைத்து விட்டு தங்கள் விருப்பம்போல் வாழ்க்கையை நடத்துகிறார்கள். அழகான அந்த ஏதேன் தோட்டத்தில் பிதாவாகிய தேவன் திருமணத்தின் மூலம் குடும்பம் என்பதை ஸ்தாபித்து வைத்தார்.

இப்போது நம் தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள இன்றைய குடும்பங்களின் அத்தியாவசியத் தேவைகள் என்னவென்பதைப் பற்றிக் காண்போம்.

## அன்பு, துணை – இன்றைய தேவை

கண்வன், மனைவி ஆகிய இருவருக்குள்ளும் அதிக அன்பும், உறுதுணையும் தேவையாயிருக்கிறதல்லவா? இன்றைக்கு அதிக அளவு குடும்பங்கள் சீரழிகிறதென்றால் இந்த அன்பும் உறுதுணையும் இல்லாததே காரணம். இயேசுவையும், அவர், சொன்ன உபதேசங்களையும் ஓர் அர்ப்பணிப்பு உணர்வுடன் சார்ந்திருந்தால்தான் இரண்டையும் பெற்றுக் கொள்ளமுடியும். பரலோக மைந்தனை உங்களுடைய குடும்பத்தில் ஒரு மாலுமியாக ஏற்றுக்கொள்ளாவிட்டால் நாம் ஒருபோதும் பரலோகம் செல்லவே முடியாது. இப்பூலோகத்தின் சொர்க்கமாக திகழ்ந்த ஏதேன் தோட்டத்தில் சிருஷ்டி கர்த்தவாகிய நம்முடைய தகப்பன் ஆராய்ந்து, மனிதன் தனிமையாய் இருப்பதைக் கவனித்து அது நல்லதல்ல என்கிறார். துணை வேண்டும் என்று நினைத்தார்.

மோசேயானவன் எழுதும்போது "மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல ஏற்ற துணையை உண்டாக்குவேன் என்றார் " என்கிறான் *(ஆதி. 2:18).*

ஆனால், பிதா எதிர்பார்த்தபடி இல்லாமல் இந்த அன்பும், துணையும் மாறி, வெறுப்பு, பிரிவினை என்பது பாவத்தினால் வந்து சேர்ந்தது. உபா. 24:1-4 வசனப்பகுதிகளில் கணவன், மனைவி பிரிந்தால் என்ன செய்ய வேண்டும் என்று கட்டளை கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. ஆதியாகமம் தொடங்கி மல்கியா வரை லட்சக் கணக்கான இஸ்ரவேல் ஜனங்களில் சரித்திரத்தை பார்க்கும்போது கணவன், மனைவி அன்பு கெட்டு, பிரிவினை, துரோகம் ஏற்பட்டு விட்டது. தேவன் தம்முடை தீர்க்கத்தரிசிகளைக் கொண்டு கடுமையாக எச்சரித்துக் கொண்டே வந்தார் மல். 2:14-16 வாசிக்கும் போது தன் இளம் வயதின் மனைவிக்கு துரோகம் பண்ணாதிருங்கள் என்று எச்சரிக் கிறார் புதிய ஏற்பாட்டில் கணவன் தன் வீட்டை விட்டுப் பிரிந்து தன் மனைவியோடு இசைந்திருக்கவேண்டும் என்று தேவன் சொல் கிறார். (மத். 19:4-6) புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்தார் (எபே. 5:25) புருஷர் களும் மனைவிகளை தங்கள் சொந்த சரீரங்களாக பாவித்து அன்பு கூற வேண்டும் (எபே. 5:28) புருஷர்களே உங்கள் மனைவிக்கு செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள் என்று 1பேதுரு 3:7ல் கூறுகிறது. வாழ்க்கை என்னுடையதல்ல நம்முடையது என்ற தத்துவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்து, கணவன், மனைவி என்ற மூன்று கோடு களும், ஒரு முக்கோணம் என்றால் மேல்கோணம் கிறிஸ்துவாகவும், கீழ் இரண்டு கோணங்களும் கணவனும் மனைவியுமாக இருந்தால் அதுதான் விசேஷமானது.

## புனிதம், மெய் பற்று – இன்றைய தேவை

ஒழுக்கம் கெட்டு, ஒழுக்கத்தை செயல்படுத்துவது இயலாது என்ற நிலையில் இன்றைய நாட்கள் உள்ளது. ஒரு பெண்ணோ பையனோ தன் வாலிபத்தை அடையாததற்கு முன்பு கீழ்க்கண்ட வசனங்களை தங்கள் சிந்தையில் கொள்ள வேண்டும். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள். (மத். 5:8) இயேசுக் கிறிஸ்து விபச்சாரத்தையும், வேசித்தனத்தையும் ஆரம்பத்திலேயே அடியோடு அறுக்கச் சொல்லுகிறார். (மாற்கு. 7:20-23) மனுஷனைத் தீட்டுப்படுத்துவது வேசித்தனம் விபச்சாரம் என்கிறார். 1 கொரி. 6:18-20-ல் வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள் என்கிறார். கலாத்தியர். 5:19-21-ல் விபச்சாரம், வேசித்தனம் மாம்சத்தின் கிரியைகள் என்கிறார். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் என்று 1.தெச. 5:22-ல் கூறுகிறார். நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகி மோக இச்சைக்குட்படாமல், தன் தன் சரீர பாண்டத்தை பரிசுத்தமாயும், கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்க வேண்டும். கர்த்தர் நீதியை சரிகட்டுகிறவராயிருக்கிறார். (1. தெச. 4:3-7) என்கிறார்.

**பெற்றோர்கள் பிள்ளைகள் இவர்களுக்கிடையே அன்பு, துணை எவ்வாறு இருக்கிறது!**

பெற்றோர் கிறிஸ்தவ அன்பை பிள்ளைகளுக்குக் காட்ட வேண்டும். பிள்ளைகளுக்காகப் பிள்ளைகளுடன் இருந்து வாழ வேண்டும். பிள்ளைகள் குடும்பத்தை ஆளுகை செய்யாமல், பெற்றோர்கள் பிள்ளைகளை ஆளுகை செய்ய வேண்டும். இது வேதாகமத்தின் கட்டளை. பிள்ளைகளின் தேவைகளை அன்போடும், கரிசனையோடும் பூர்த்தி செய்ய வேண்டும். நீ பிள்ளையாயிருந்தால், இப்போது பெரிய வனாகி தனி குடும்பமாய் இருந்தால், நீ எத்தனை முறை உன் பெற்றோரைப் போய் பார்த்திருக்கிறாய்? எத்தனை முறை பேசியிருக் கிறாய்? அருகாமையில் இருந்தால், கடைசியாக; போய் உன் பெற்றோரைப் பார்த்து பேசி, அவர்கள் தேவைகளை சந்தித்து எவ்வளவு நாள் ஆயிற்று? இதோ இன்று நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகிறேன் என்று யோசுவா. 23:14 ல் கூறியபடி உங்கள் பெற்றோர்கள் போகிறதற்குள்ளாக போய் கவனிக்காதபடி உங்கள் அலுவலர்கள், நண்பர்கள் காரணமாயிருக்கிறார்களா? நிறைய பிள்ளைகள் தங்கள் பெற்றோர் கண்ணை மூடிய பிறகு அவர்கள் அன்பு, துணை இவற்றைப் பற்றி பெரிதாகப் பேசுவார்கள். பரிசுத்த ஆவியானவர் இதைப்பற்றி வேதாகமத்தில் எழுதிப் கொடுக்கவில்லையா (எபே. 6:1-2). தாமதமின்றி அவரின் போதனைப்படி நடப்போம். இயேசு கிறிஸ்து நம் அன்பும் துணையும் பலப்படவுமே இவ்வுலகிற்கு வந்தார்.

பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்போது பாலிய ஸ்திரீகளை எல்லாக் கற்புடன் கூடிய சகோதரிகளைப் போலவும், பாவித்து, புத்தி சொல்லு (1 தீமோ. 5:2) என்கிறார். 1 தீமோ. 5:22ன் சட்டமே உன்னை சுத்தனவாகக் காத்துக்கொள் என்பதுதான். பால் சம்பந்தப்பட்ட உறவு என்பது, திருமணம் சம்பந்தப்பட்ட ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். இந்த உறவு வேறு எந்த வகையில் கிடைத்தாலும் அது (பா-வ-ம்) என்ற மூன்றெழுத்திற்குள் அடங்கியே தீரும். இயேசு இதைப் பற்றி கூறும் போது வேசித்தன முகாந்திரத்தினாலொழிய தன் மனைவியை தள்ளி விடக்கூடாது என்கிறார் (மத். 5:32), மத்தேயு 19:9-ம், காரியத்தை இயேசு கிறிஸ்து வலியுறுத்துகிறார். நீதி.9:17யை நாம் வாசிக்கையில் சாத்தான் கூறுகிற அறிவுரைகளைக் கேட்க கூடாது என்று ஞானி புத்தி சொல்லுகிறான். திருமணத்திற்கு மெய்பற்று, புனிதத் தன்மை இவற்றிற்கு கிறிஸ்து அதிகாரியாக இருக்கிறார். எனவே, கிறிஸ்துவின் உபதேசத்தை பின்பற்றுவோம்.

**மன்னித்தல், தயவு, இரக்கம், கரிசனை இன்றைய தேவை**

குடும்பமாயிருந்தாலும், சபையாயிருந்தாலும் மன்னித்தல் என்பது மிக அவசியம். மனுஷனுடைய தப்பிதங்களை நீங்கள் அவர் களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார், மன்னியாதிருந்தால் உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் (மத். 6:14,15). ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு

உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக் கொருவர் மன்னியுங்கள் (கொலோ. *3:13*). கொலோசே பட்டணத்து மக்கள், குடும்ப சூழல், குடும்ப உறவு நிலைகளின் மத்தியில் வாழ்ந்த வர்கள். பவுல் மனைவிகளுக்கும், கணவர்களுக்கும், பெற்றோர் களுக்கும் கூறுவதைப் பாருங்கள். மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். புருஷர்களே, உங்கள் மனைவி களில் அன்புகூறுங்கள், அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள், பிள்ளை களே, உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப் படியுங்கள். இது கர்த்தருக்குப் பிரியமானது. பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்று போகாதபடி அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள் (கொலோ. *3:18-21*).

மன்னிப்பு என்பது ஒன்று, இரண்டு, மூன்று முறை அல்ல. பேதுரு ஏழுமுறை போதும் என்று நினைத்தபோது, இயேசு கிறிஸ்து ஏழெழுபது முறை (மத்.18:22) என்கிறார். இயேசு கிறிஸ்து மத். 17:4-ல் ஒருநாளில் ஏழு தரம் உனக்கு விரோதமாய் குற்றஞ் செய்து ஏழு தரமும் உன்னிடத்தில் வந்து, நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக என்றார். இது இன்றைய தேவைதான். அன்பான வார்த்தை தயவை ஏற்படுத்துகிறது. இதைப்பற்றி வேதம் கூறும்போது, ஒருவருக்கொருவர் தயவாயும் (எபே. *4:32*) இருங்கள் என்கிறது. தங்க சட்டம் என்று போற்றப்படுகிற மத். 7:12 லும் இதையே நாம் வாசிக் கிறோம். மற்றவர்கள் நம்மீது தயவு, அன்பு, மன்னிப்பு இவைகளை காட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கும்போது நாம் இவைகளை முந்தி அவர்களுக்குக் காட்ட வேண்டும்.

இரக்கமும், கரிசனையும் இன்றைய குடும்பங்களின் தேவையாயி ருக்கிறது. இது ஏதோ கடையில் வாங்கும் பொருள்கள் அல்ல. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் இதை நடைமுறைப்படுத்த வேண்டும். அப்போது தான் பரலோகத்தின் தேவனும், இயேசு கிறிஸ்துவும் நம்முடைய குடும்பத்திற்கு ஆசீர்வாதத்தையும் இரக்கத்தையும் கட்டளையிடுவார். அப்பொழுது தான் நம் வாழ்க்கை சமாதானம் நிறைந்தாக இருக்கும்.

## வேதம் நம் வாழ்வில்

- ✤ முகம் பார்க்கும் கண்ணாடி
- ✤ தாகம் தீர்க்கும் ஜீவ தண்ணீர்
- ✤ நிலைத்திருக்கும் கன்மலை
- ✤ வாழ்வின் வெளிச்சம்
- ✤ காரிருளில் தீபம்
- ✤ சிட்சிக்கும் கட்டளை
- ✤ நியாயந்தீர்க்கும் நியாயாதிபதி
- ✤ பரம்சேர்க்கும் வழிகாட்டி

வாலிபர் பகுதி

# தீமை

**Bro. சேகர்**

**ஆ**ண்டவாகிய இயேசுவின் நாமத்தில் வாலிபராகிய உங்களுக்கு வாழ்த்துக்கள்! கண்ணில் காணும் காட்சிகள், நெஞ்சில் தோன்றும் வழிகள் எல்லாம் நன்மைகள்தான் என்றும் நலம்பயக்கும் காரியங்கள் தான் என்றும் அது, மனதை மகிழ்வூட்டும் இதயத்தை இனிதாக்கும் என்ற யதார்த்த நினைவில் கல்லங்கபடமில்லா நெஞ்சாய் தீமையின் தீது அறியா தீவினைகளை திருவினைகளாக்கும் தீயோடு விளையாடும் வாலிப நெஞ்சங்களே! தீது என்பது யாது என்று அறிவோமா?

தீமை என்ற இரண்டு எழுத்துள்ள இந்த வார்த்தை ஒன்றாக இணைந்தும் தனித்தனியே நின்றும் பொருள் தருவதாகவே உள்ளது. எப்படியென்றால் தீ-என்பது-நெருப்பு (சுட்டெரிக்கும் தன்மையுள்ளது) மை-என்பது-கறுமை-காரிருள் (மையிருட்டு) எப்படி பார்த்தாலும் இதை சிறப்பாகப் பார்ப்பதற்கில்லை.

## தீமை என்பது என்ன?

நன்மை (அ) வாய்மை என்பதின் பொருள் என்ன என்பதை அறிந்தால் தீமை என்ன என்பதை அறிவது சுலபம் ஆம் வாய்மை என்பது என்னவென்றால் யாதொரு தீதும் இல்லாத சொல் (அ) செயல். அப்படியானால், தீமை என்பது பிறருக்கு வலியும் வேதனையும் உண்டாக்குகின்ற அல்லது காயத்தை ஏற்படுத்துகின்ற செயல் அது மட்டுமல்ல அது பாவத்தையும் தேவனுக்கு விரேசதமான செயலையும் கூட குறிக்கிறது. தீமை என்பது பொல்லாங்கின் பேரொளி. நிச்சய விளைவுகளை உண்டாக்குகின்ற கோடுகளை உருவாக்குகின்ற விபரீத வார்த்தை இது பேச்சில், உணர்வில், நோக்கத்தில், செயலில் கலந்திருக்கும். இவைகளை களைந்து. சிந்தித்தால் நலம், தீமை, பொல்லாங்கு, பாவம், இவை மூன்றும் ஒன்றாயிருக்கிறது. தீமையின் நாளுக்கென்று, துன்மார்க்கனையும் தேவன் உண்டாக்கினார்.

## தீமையும், துன்மார்க்கமும்

தர்மமும், நீதியும், நன்மையும் நிறை மார்க்கம் சன்மார்க்கம், சன்மார்க்கத்திற்கு வழியும் விளைவும் உண்டாயிருக்கிறது. அதுபோல, பாவமும் பொல்லாங்கும், தீமையும் நிறைந்த மார்க்கம் துன்மார்க்கம், இதற்கும் வழியும் விளைவுகளும் உண்டு. தீமை நம்மை கறைபடுத்தவும், காயப்படுத்தவும் அழிக்கவும் முயற்சிக்கிறது. ஆம், தீமை கறைபடுத்தி

துன்மார்க்கன் என்ற அடையாளத்தைக் கொடுக்கிறது. தீமை காயப் படுத்தி வேதனையை உண்டாக்கிறது. தீமை நம்மை அழிவுக்குட் படுத்தி நித்திய ஆக்கினைத் தீர்ப்பை நம்மேல் எழுதுகிறது. தீமையோடு விளை யாடுகிறவன் தீயோடு விளையாடுகிறான். தீமையோடு எதிர்த்து நிற்கிறவன் அதன் விளைவுகளை அறியாதிருக்கிறான். தீமைகளை சகித்துக் கொள்ளாதவன் நீதியைக் கேள்வி கேட்கிறான். வேதனை உண்டாக்கும் வழியே துன்மார்க்கம். தீமையை பின்பற்றுகிற அனைவரும் துன்மார்க்கத்தில் நடக்கிறார்கள். எனவே தீமையின் திசை திரும்பாமலும், பாவத்தின் பக்கம் பாராமலும் இருப்போமானால் தீமை நம்மை அணுகாது. தீமை இருள் சூழ்ந்த இருதயத்தையே அனுகும் துன்மார்க்கனையே அது விரும்பி அவனுக்குள், குடிகொண்டு எல்லோரையும் கெடுக்கும். கர்த்தருக்குப் பயன்படுவதினால் மனுஷர் தீமையை விட்டு, விலகுவார்கள்.

**தீமைகளோடு எதிர்த்து நிற்க வேண்டாம் மத்:5:39**

தீமையைக் கண்டு ஓடினால் கோழை என்றும், எதிர்த்தால் வீரனென்றும் சொல்வதும் நினைப்பதும் மனுஷ ஞானம் வேத ஞானம் என்ன சொல்லுகிறது? ஞானமா? வீரமா? என்றால் ஞானமே பிரதானம், வீரமுள்ளவனா? ஞானமுள்ளவா? என்றால் ஞான முள்ளவனே சுந்தரன். ஆம், ஞானம்முள்ளவனே பெலமுள்ளவன் (பிர. *9:16,18*). யுத்த ஆயுதங் களைப் பார்க்கிலும் ஞானமே நலம் எனவே தான் மனுஷன் தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம் என்றும் எதிர்த்து நிற்பது ஞானமல்ல வென்றும் ஞானி சாலோமோன் கூறுகிறார் பழிவாங்கவேண்டும், பலவந்தம் செய்ய வேண்டும் என்று பட்டயத்தோடு வருபவனை நீ எதிர் கொள்ள உனக்குத் தேவையானது அவனுடைய பட்டயத்திலும் கூர்மையான பட்டயமல்ல, பட்டயத்திலும் கூர்மையான ஞானம். ஆம், அரிவாள் வெல்லாதெதையும் அறிவாள் வெல்லக்கூடும். எனவே, ஞானமுள்ளவனே பெலமுள்ளவன். ஞானமுள்ளவர்களின் பெலம் எதுவென்று தெரியுமா? அன்பு, சாந்த குணம், தான தர்மம் (நன்மை செய்தல்) ஆண்டவர் சொல்லுகிறார் நீ நன்மை செய்தால் மேன்மை யில்லையோ நன்மை செய்யாமல் தீமை செய்தால் பாவம் வாசற் படியில் படுத்திருக்கும், தீமையை விரும்பக்கூடாது. நன்மையை வெறுக்கக் கூடாது. நன்மை செய்தால் மேன்மை உண்டு என்பதையும், பாவம் எந்த ஜனத்திற்கும் இகழ்ச்சி என்பதையும் உணரவேண்டும். தமையின் தீவிரம் என்ன செய்கிறது என்று பாருங்கள். யோசேப்பின் வஸ்திரத்தை பற்றி இழுத்தாள் போர்த்திபாரின் மனைவி. தேவனுக்கு விரோதமாய் எப்படி பாவம் செய்வது என்று சொல்லி வஸ்திரத்தையும் விட்டு ஓடினான் யோசேப்பு. ஆம், இளமையின் வேகத்திலிருந்த யோசேப்பு வாலிப முறுக்கத்திலிருந்த யோசேப்பு, பற்றி எரிகிற கவர்ச்சியைக் கண்டும் உணர்வுக்கு இடம் கொடுக்காமல் தேவனை தனக்கு முன் நிறுத்தி தடுமாற்றமில்லாமல் தன்னைக் காத்துக்

கொண்டது எத்தனை ஆச்சரியம். பிரியமானவர்களே! இன்று உணர்வுகளுக்கு இடம் கொடுத்து. சிற்றின்பமே பேரின்பத்தைப் பெறும் வழி என்று அடிமைப்பட்டுக் கிடக்கின்ற ஒருவரும் நிம்மதி காணவில்லை. யோசேப்பு தீமையை (வஸ்திரத்தை) விட்டு ஓடினான் என்றால் அந்த தீமையின் தீவிரம் எவ்வளவு பயங்கரமானது என்பதை யோசேப்பு எப்படி உணர்ந்திருப்பார் என்பதை நம்மால் யூகிக்க முடியவில்லை. எனவே, ஆண்டவருக்குப் பயப்படுதலே ஞானம் பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி என்று உணர்வோம்.

**தீமைக்குத்தீமை தீர்வாகாது**
**தீமைக்குத்தீமை செய்வது நல்லதல்ல**
**நன்மைக்குத்தீமை அது சாபம்**
**தீமைக்கும் நன்மை செய்தல் ஆசீர்வாதம்**
**இதில் ஞானமடைந்து பெலமாய் வாழ்வோம்**
**ஜெயம் கொள்ளுவோம்**
**பாவத்தின் (தீமை) சம்பளம் மரணம்**

## நாளும், நடப்பும்

1. உலகின் முதல் சூரிய சக்தி விமானம் இம்மாதம் இந்தியாவில் பயணம்
2. வாக்காளர் பட்டியல் திருத்தம் – ஆதார் பதிவு ஒரே இடத்தில் சிறப்பு முகாம் – தலைமைத் தேர்தல் அதிகாரி.
3. பெட்ரோல் லிட்டருக்கு விலை ரூ. 3.18, டீசல் ரூ. 3.09 அதிரடி உயர்வு.
4. நாடு முழுவதும் பன்றிக் காய்ச்சலால் இந்த ஆண்டில் இதுவரை 1,158 பேர் பலி.
5. ரூபாய் பத்தாயிரம் கோடியில் ராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய அனல் மின் நிலையம்.
6. உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகள் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கிறது.




# ஆண்டவர் பற்றி

**Dr. ABEL R. NAYAGAM**

எனக்குப் பிரியமான சிறு குழந்தைகளே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதமும் இவ்விதழ் வழியாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அனைவரும் நலமாக இருக்கிறீர்களா? இந்தப் பள்ளியாண்டு முடிந்து விடுமுறை நாட்கள் ஆரம்பமாக இருக்கின்றது. அப்படித்தானே? சரி குழந்தைகளே! இந்த மாதம் நாம் கிறிஸ்துவைப் பற்றி நீங்கள் முழுமையாகவும், தெளிவாகவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

**இயேசு ஆதியிலே தேவனோடு இருந்தார்**

எபிரேயர் *1:3*ல் இயேசு தேவனுடைய மகிமையின் பிரகாசமும், தேவனுடைய தன்மையின் சொரூபமுமாயிருந்தார் என்று சொல்கிறது. யோவான் *1:1* ல் இயேசுவை வசனம், வார்த்தை என்று சொல்கிறது. ஆதியிலே வார்த்தயாக இயேசு தேவனோடு இருந்தார். எனவே, அவர் தேவத்துவத்தில் ஒருவராக இருக்கிறார். எப்படி தேவன் நித்தியமான வரோ, அப்படியே இயேசுகிறிஸ்துவும் நித்தியமானவர். எபி. *13:8*-ல் இயேசு நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என்று கூறுகிறது. இயேசு ஆதியாக இருக்கிறார் என்று வெளி*:3:14*-ல் வாசிக்கிறோம். அதே வெளி. *22:13*-ல் இயேசு ஆரம்பமும் முடிவுமாக இருக்கிறார் என்று சொல்கிறது.

**இயேசு கிறிஸ்துதான் எல்லாவற்றையும் உண்டாக்கினார்**

ஆதி *1:1* ல் ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் என்று வாசிக்கிறோம். எபிரெய பாஷையிலே தேவன் என்ற வார்த்தை பன்மையிலே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அது தேவனையும், வார்த்தையாகிய கிறிஸ்துவையும், பரிசுத்த ஆவியையும் உள்ளடக்கும். ஆதி. *1:26* ல் நமது சாயலாக மனுஷனை உருவாக்குவோம் என்று வாசிக்கிறோம். கொலோ. *1:16,17*-ல் சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் (இயேசுவுக்கு) எழுதப்பட்டிருக்கிறது. இயேசு எல்லாவற்றிக்கும் முந்தினவராக இருக்கிறார்.

- தொடரும்....

பிள்ளைகளே! தொடர்ந்து அடுத்த மாதம் இந்தப்பாடத்தை நாம் தொடருவோம். உங்களுக்கு இன்னுமொரு சந்தோஷமான செய்தி, மே மாதம் ஏலகிரி மலையில் வேனிற்கால முகாம் நடக்கவுள்ளது. அதிலே உங்களைப் போன்று நிறைய குட்டிப்பிள்ளைகள் வருகிறார்கள். அங்கே உங்களுக்கு பாடல், வேதபாடம், போட்டி என்று காரியங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. எனவே, அதற்கென்று நீங்கள் ஆயத்தமாகுங்கள். தவறாமல் பங்கு பெறுங்கள்! உங்கள் நண்பர்களையும் கூட்டிக்கொண்டு வாருங்கள்.

# மாரடைப்பு



## (ANGINA PECTORIS)

" **வா**சகர்களே! Heart Attack என்பது இன்றைய நாட்களில் நாம் அடிக்கடி கேள்விப்படுகிற ஒரு பிரச்சனையாக மாறிவருகிறது. எல்லா வயதினரையும் சகட்டுமேனிக்கு பாதிக்கின்ற ஓர் உயிர்க்கொல்லிப் பிரச்சனையாக இருக்கிறது.

**மாரடைப்பு ஏன் வருகிறது?**

- இருதயத்தில் இருக்கும் இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படும்போது
- இது, இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் இருக்கிறவர்களை அதிகமாகப் பாதிக்கும்.

**மாரடைப்பு சம்பந்தமான தவறான எண்ணங்கள்**

- பொதுவாக, நெஞ்சுவலியாக மாரடைப்பு ஆரம்பமாகும்.
- எப்போதும் அது நெஞ்சுவலியாகவே வருவதில்லை. சிலருக்கு தோள்பட்டை வலி, கழுத்து வலி, நெஞ்சு எரிச்சல், வாந்தி என்று பல்வேறு வகைகளில் வெளிப்படும்.
- இதை அநேகர் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல், அலட்சியப் படுத்துகின்றனர்.

**மாரடைப்பு வந்தால் என்ன செய்யவேண்டும்?**

- உடனே மருத்துவரை அணுக வேண்டும்.
- ECG டெஸ்ட் எடுத்துக்கொள்ள வேண்டும்
- சர்க்கரை நோய் உள்ளவர்கள், இரத்த அழுத்தம் இருப்பவர்கள், இரத்தத்தில் அதிகக் கொழுப்பு உள்ளவர்கள் உடனுக்குடன் மருத்துவரை அணுகி சிகிச்சை பெறவேண்டும்.
- ECG- (Normal) நன்றாக இருக்கிறது என்று சொன்னாலும், மாரடைப்பு இல்லை என்று அர்த்தமல்ல ECG டெஸ்ட்டால் கண்டுபிடிக்கப்பட முடியாத மாரடைப்பு வகையும் உண்டு.
- எனவே, குறைந்தபட்சம் Trop - T, CKMB ஆகிய இவ்விரண்டு இரத்தப் பரிசோதனைகளையும், ECG டெஸ்ட்டுடன் செய்து கொள்வது மிக மிக அவசியம்

ஏற்ற நேரத்தில் மருத்துவரை அணுகுவது, நிச்சயமாக மாரடைப்பால் ஏற்படுகின்ற உயிரழப்புகளைக் குறைக்கும். கவனமாக இருப்போம்.

Dr. ஏபில் நாயகம், CMC வேலூர்.

# கிறிஸ்து என்னும் மார்க்கம்

**சகோ. ஜே.ஆ. ஜேம்ஸ் ராஜகுமார்**

கர்த்தருக்குள் அன்பான திருமறை ஆசான் பத்திரிக்கை வாசகர் களாகிய உங்கள் அனைவருக்கும் உயிர்த்தெழுந்து ஆளுகை செய்கிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் வாழ்த்துக்களையும் ஸ்தோத்திரங்களையும் இந்தப் பத்திரிக்கை வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

கிறிஸ்து என்னும் மார்க்கத்தில் அதாவது ஜீவனில் நடக்க விரும்பு கிறவர்கள், முதலாவது பிதாவையும் அவருடைய குமாரரான இயேசு கிறிஸ்துவையும் அறியவேண்டும் என்பதற்காக பிதாவையும், குமார ரையும், பரிசுத்த ஆவியானவரையும் பற்றி வேதாகமம் என்ன சொல்லு கிறது என்பதை ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். இதிலே முக்கியமாக தேவத்துவத்தில் ஒரே நபர் மட்டும் இல்லை, ஒன்றுக்கும் மேற்பட்ட வர்கள் இருக்கிறார்கள் என்பதை சென்ற மாதங்களில் கவனித்தோம். (திரித்துவம் என்பது தேவன் தன்னைப் பற்றி மனிதனுக்கு சொல்லும் போது பயன்படுத்தப்பட்ட வார்த்தை அல்ல அதாவது திரித்துவம் என்ற வார்த்தை வேதாகமத்தில் இல்லை. இது மனிதனால் திரிக்கப்பட்டது).

தேவத்துவம் என்ற வார்த்தையையே தேவன் தன்னைப்பற்றி சொல்லும்போது பயன்படுத்தியிருக்கிறார். புதிய ஏற்பாட்டில் மூன்று இடங்களில் இந்த வார்த்தை எழுதியிருக்கிறது அப்போஸ்தலர் நடபடிகள் 17:29 தெய்வம் (Divine) என்றும், ரோமர் 1:20-ல் தேவத்துவம் (Godhead) என்றும், கொலோசியர் 2:9-ல் தேவத்துவத்தின் என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த தேவத்துவம் அல்லது தெய்வம் என்னும் வார்த்தையானது பிதா, குமாரன், பரிசுத்தஆவி மூவரையும் ஒன்றிணைத்து சொல்லக்கூடிய வார்த்தையாக இருக்கிறது. இதை நிருபிக்கும்படி சென்ற மாதத்தில் நாம் சில வசனங்களையும் அதன் விளக்கங்களையும் கவனித்தோம், இந்த மாதத்தில் இன்னும் சற்று முன்னேறிச் செல்வோம்.

எனக்குத் தெரிந்தவரை வேதாகமத்தில் அநேக இடங்களில் பிதாவையும், குமாரனையும் பற்றிச் சொல்லும் போது இருவராக அதாவது இரண்டு நபராக தெளிவாகச் சொல்லுகிறது. ஆனால், இந்தக் கீழ்க்கண்ட வசனங்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி மூவரையும் மூன்று பேராக தெளிவுபடுத்திக் காண்பிக்கிறது.

**சங்கீதம் 2:**

இந்த சங்கீதம் தாவீது எழுதினார் என்று 2ம் சங்கீதத்தில் முகவு ரையாக சொல்லப்படவில்லை. ஆனால் வெவ்வேறு சங்கீதங்களுக்கு இதை யார் எழுதினார் என்பதை முகவுரையில் எழுதிச்சொல்லி இருக்கிறார்கள். இந்த இரண்டாம் சங்கீதம் தாவீதினுடையது என்பதை

புதிய ஏற்பாட்டு வசனங்கள் தெளிவுப்படுத்துகிறது. அப்போஸ்தலர் நடபடிகள் 13 ம் அதிகாரத்தில் பவுலும், பர்னபாவும் சென்ற முதலாம் சுவிசேஷ ஊழிய பயணத்தில் பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவில், அப்போஸ்தலனாகிய பவுல் அங்குள்ள ஜெப ஆலயத்தில் பிரசங்கித்த செய்தியில் வசனங்கள் 16-41-ல் இரண்டாம் சங்கீதத்தை மேற்கோள் காட்டி பேசுகிறார். அப்பொழுது அவர் இந்த 2ம் சங்கீதம் தாவீதுக்கு அருளப்பட்ட நிச்சயமான கிருபை, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து இந்த சங்கீதம் முன்னுரைக்கிறது என்று கூறுகிறார்.

நிச்சயமாக அப்போஸ்தலாகிய பவுல் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு ஒரு தீர்க்க தரிசியாக தேவனுடைய மனுஷனாக அந்த பிரசங்கத்தைச் செய்தார். ஏனெனில் வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பபட்டிருக்கிறது... 2 தீமோத்தேயு 3:16; மேலும் 2பேதுரு 1:21 இதை உறுதி செய்கிறது. தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள். ஆகையால் வேத வசனங்கள் எல்லாம் தேவனுடைய வார்த்தை என்பது நம்மெல்லாருக்கும் தெரியும். வேத வசனத்தை நம்பினால் அது சொல்லுகிற கருத்தையும் நம்ப வேண்டும். 2ம் சங்கீதம் தாவீது எழுதினார். அவர் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசினார் அல்லது எழுதினார் என்பது உண்மை.

இந்த இரண்டாம் சங்கீதத்தில் ஆரம்ப வசனங்களாகிய 1 முதல் 5 வசனங்கள் பரிசுத்த ஆவியானவர் பூமியின் ஜனங்களைப்பார்த்து கேள்வி கேட்டதைப் போல உள்ளது. 6ம் வசனத்தில் நான் என்பது பிதாவாகிய தேவனை குறிக்கிறது. அதே வசனத்தில் என்னுடைய ராஜா என்பது கிறிஸ்துவைக் குறிக்கிறது. அதாவது பிதாவாகிய தேவன் கிறிஸ்துவை சீயோன் மீதில் ராஜாவாக்குகிறார் என்றார். தேவன், பரம எருசலேம் மீதில் இன்னும் சொல்ல வேண்டுமானால் பரலோக மீதில் இன்னும் சொல்ல வேண்டுமானால் பரலோக ராஜ்யத்திற்கு கிறிஸ்துவை ராஜாவாக அபிஷேகம் பண்ணினார் என்கிறார். இந்த வசனத்தில் ஒருவர் இன்னொருவரை இராஜாவாக ஏற்படுத்தினர் என்று உள்ளதே தவிர, அவரே தன்னைத்தனே ராஜாவாக்கிக் கொண்டதாக இல்லை என்பதை நாம் படித்துப் பார்த்து கவனிக்க வேண்டும் இந்த 6-ம் வசனத்தில் பிதாவும், குமாரனும் ஆக இருவர் உள்ளனர். இந்த 6-ம் வசனம் பிதாவானவர் குமரனுக்காக பேசுவதைப் போல உள்ளது.

ஆனால் 7 முதல் 9 வசனங்கள், பிதாவானவர் குமாரனிடத்தில் பேசினதை குமாரன் நமக்கு சொல்வதாக உள்ளது. இந்த வசனத்தில் பிதாவினிடத்தில் வார்த்தைகளைப் பெற்றுக்கொண்ட குமாரர், அதை அப்படியே நமக்குப் பேசுகிறார். தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன் நம்முடைய கவனத்தை அவர் தம் பக்கம் திரும்ப கேட்கிறார். அதன்பிறகு சொல்கிறார். கர்த்தர் என்னை நோக்கி இங்கே கர்த்தர் என்ற வார்த்தை பிதாவைக் குறிக்கிறது. என்னை என்பது குமாரனை அதாவது கிறிஸ்துவைக் குறிக்கிறது. மேலும் அவர் அதாவது பிதா என்ன சொன்னார்

என்பதை அவர் சொன்னபடியே அப்படியே சொல்கிறார். நீர் என்னுடைய குமாரன் அதாவது கிறிஸ்து பிதாவாகிய தேவனுடைய குமாரன் என்பதையும், இது இரண்டு நபர்களின் உரையாடல் என்பதையும் தெளிவுப்படுத்தி இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்கிறார். அதாவது பிதாவாகிய தேவன் கிறிஸ்துவை உயிர் பெறச் செய்தார் என்பதை விளக்கும்படியாக நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்கிறார். இந்த சங்கீதத்தில் பிதாவுக்காக சொல்லப்பட்ட வார்த்தைகளையும், குமாரருக்காக சொல்லப்பட்ட வார்த்தைகளையும் தனித்தனி கட்டங்களில் கவனிக்கலாம்.

| இரண்டாம் சங்கீதம் | | |
|---|---|---|
| **வசனம்** | **பிதாவை குறிக்கும் வார்த்தை** | **குமாரனை குறிக்கும் வார்த்தை** |
| 2 | கர்த்தர், அவர் | அபிஷேகம் பண்ணப்பட்டவர் |
| 4 | பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் | ஆண்டவர் |
| 6 | நான் | ராஜா, அபிஷேகம் பண்ணப்பட்டவர் |
| 7 | கர்த்தர் | என்னை |
| 7 | என்னுடைய (பிதாவுடைய) | நீர், குமாரன் |
| 7 | நான் | உம்மை |

சங்கீதம் **2:12**-ல் குமாரன் என்ற வார்த்தையை கிறஸ்துவுக்காக பரிசுத்த ஆவியானவர் தாவீதைக் கொண்டு எழுதினார். ஆகவே இந்த இரண்டாம் சங்கீதத்தின் நிறைவில் பரிசுத்த ஆவியானவர் பூமியின் இராஜாக்களுக்கு அறிவுரையும் எச்சரிக்கையும் சொல்லுகிறார். ஆகவே இந்த சங்கீதத்தில் பிதாவைப் பார்க்கலாம், குமாரனைப் பார்க்கலாம், பரிசுத்த ஆவியானவரைப் பார்க்கலாம். மூவரும் ஒரே நபராக இருந்தால் இது ஒரு மனிதனால் எழுதப்பட்ட சித்தரிக்கப்பட்ட கதை வசனமாக இருக்குமே ஒழிய, தெய்வீக வார்த்தைகளாக இருக்க முடியாது. தாவீது பிதாவையும், குமாரரையும் ஒரே நபராக அல்ல இரண்டு நபர்களாகப் பார்த்தார். இதையே அப்போஸ்தலனாகிய பவுல் தன் செய்தியில் அப் **13** ம் அதிகாரத்தில் வசனங்கள் **30-33**ல் எழுப்பினவர் ஒருவர் எழுந்தவர் ஒருவர் என இருவரை திட்டமாய் குறிப்பிடுகிறார் என்பதை கவனமாகப் படித்தால் புரிந்து கொள்ளலாம்.

பிதாவாகிய தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் உங்களைச் சார்ந்த யாவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

- தொடரும்...

## சபை பற்றி இயேசுவின் விருப்பம்

**ச**பையானது தூய்மை நிறைந்தது. மனிதன் அதைப் பரிசுத்தமாகவும், சுத்திகரிக்கப்பட்ட நிலையிலும் வைத்துக்கொள்ள வேண்டும். மேலும், கறை, திரையற்ற, குற்றமற்ற பரிசுத்தமான சபையாக விளங்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார் (எபே. 5:26; 2 பேதுரு 1:22,23)



## வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

# திராட்சைச் செடி

சகோ. கே. பாஸ்கர்

அன்பார்ந்த வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள். இந்த தொடர் பாடத்தில் இம்மாதம் திராட்சைச் செடியின் உவமையின் மூலமாக வசனரீதியான கிறிஸ்துவின் சபையைத் தெரிந்து கொள்வோமாக! இது குறித்து இயேசு கிறிஸ்து போதித்தது என்னவென்றால் (யோவான் 15:1).

### திராட்சைச் செடி

நானே மெய்யான திராட்சைச் செடி என்று ஆண்டவர் இயேசு கூறினார். மேலும், அவர் சொல்லுகிறார் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என்றும் (யோவான் 15:5). நானே வாசல் என் வழியாய் ஒருவர் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான் அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான் என்றும் கூறுகிறார். (யோவான் 10:9) அவரை நம் வாழ்வில் ஏற்றுக் கொள்ள இரட்சிப்பின் திட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். அதாவது ஞான ஸ்நானத்தின் மூலமாக அவரை தரித்துக் கொள்ள முடியும் (கலா. 3:27) அப்பொழுது விசுவாசத்தின் மூலமாக அவர் நமக்குள் வாசம் செய்வார். (எபே. 3:17) கிறிஸ்து இல்லாமல் இன்று எத்தனையோ சபைகள் இருக்கின்றன. உதாரணமாக யேகோவா சாட்சியினார், ரோமன் கத்தோலிக்கம் போன்ற சபைகள் இருக்கின்றன. அவைகளெல்லாம் உயிரற்றவைகளாகும் .

### திராட்சைக் கொடிகள்

இயேசு சொன்னார் நானே திராட்சைச் செடி நீங்கள் கொடிகள் என்றார். கொடிகள் எப்பொழுதும் செடியோடுதான் இருக்க வேண்டும். அப்பொழுது தான் கொடிகள் உலர்ந்து போகாமல் செழிப்பாக இருக்கும். அதுபோலவே நாமும் கிறிஸ்துவோடு எப்பொழுதும் இணைந்து இருக்கவேண்டும். கிறிஸ்து+அவன்=கிறிஸ்தவன். அப்பொழுது தான் மகிழ்ச்சியாக கிறிஸ்துவனாக வாழ முடியும். கிறிஸ்தவர்கள் ஒன்று கூடுவதே சபையாகும். அவர்கள் வேறு பெயரில் ஒன்று கூடக் கூடாது. இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறோன் என்றார். (மத். 18:20). அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிக்கப்படும் படிக்கு வசனத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமயேல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. (அப். 4:12) அப்படியிருக்கும்போது நாம் பெந்தெகொஸ்தாகவோ C.S.I யாகவே எப்படி இருக்கலாம்! சிந்திப்பீர்.

### உலர்ந்த கொடிகள்

இயேசு கூறுகிறார் ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால் வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு உலர்ந்த

போவான் (யோவான் 15:6) நாம் அவரிலும், அவருடைய வார்த்தையிலும் நிலைத்திருக்கவேண்டும். கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும். (2 யோவான் 9) இன்று அநேகர் கிறிஸ்துவின் உபதேசத்தை விட்டுப் பிரிந்து செயல்படுவதைக் காணலாம். பிரிந்து போகிறவன் தன் இச்சையின்படி செய்யப் பார்க்கிறான் (நீதி. 18:1) பிரிவினை என்பது மாம்சத்தின் கிரியை (கலா. 5:20). இது சுய இஷ்டத்தின் ஆராதனை. சுய இஷ்டமே பாவத்தின் வேறாகும். உன் சுய புத்தியின்மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கை வை (நீதி. 3:5,6) எனவே, நாம் பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தி இருக்கவேண்டும் (1 கொரி. 1:10) பிரிவினை சபைகளை ஏற்படுத்துகிறவன் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வழிற்றுக்கே ஊழியம் செய்கிறார்கள். (ரோமர் 16:17,18). திராட்சைச் செடியில் இணைக்கப்படாமல் இருந்தால் திராட்சைக் கொடியாக இல்லாமல் வேறு கொடியில் படரு கின்ற கசப்பான கொடிகளாகக் காணப்படும். தேவன் ஒரு திராட்சைச் செடியை மட்டும் நாட்டியிருக்கிறார். அதுவே கிறிஸ்துவின் செடி, கிறிஸ்துவின் சபையாகும். பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும் (மத். 15:13).

## திராட்சைக் கனிகள்

நாம் திராட்சைச் செடியில், அதாவது கிறிஸ்துவில் நிலைத்திருந்தால் அவருடைய உபதேசத்தில் நிலைத்திருந்தால், கிறிஸ்துவின் ஒரு சபையில் நிலைத்திருந்தால் திராட்சைக் கனிகளைக் கொடுப்போம். இல்லையென்றால் கசப்பான கனியைக் கொடுக்கிறவர்களாகக் காணப் படுவோம் (ஏசா. 5:1-6) நாம் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத் திருந்தால் தேவனுக்குப் பிரியமாக மிகுதியாகக் கனிகளைக் கொடுக்க முடியும் (யோவான் 15:8). கிறிஸ்துவின் உபதேசம் நம்மை சுத்தப்படுத்து கிறது. கிறிஸ்துவின் உபதேசம் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் (மாற்கு 16:16) இரட்சிக்கப்படுகிறவர் களை அனுதினமும் அவருடைய சபையிலே சேர்த்துக் கொள்கிறார். திராட்சைச் செடியாக இருக்கின்ற கிறிஸ்துவின் சபையில் வாரத்தில் முதல் நாள்தோறும் அப்பம் பிட்டு கிறிஸ்துவை நினைக்க வேண்டும் (1 கொரி. 11:23, 29 அப். 20:7) மரண பரியந்தம் உண்மையாக இருக்க வேண்டும் (வெளி. 2:10) அப்பொழுது நாம் சுத்தமுள்ளவர்களாகக் காணப்படுவோம்.

தேவன் அதினதின் செடியை வைத்து அந்த கனிளைக் கொடுக்கும் படி அமைத்தார். கிறிஸ்தவன் கிறிஸ்துவின் சபையிலே தான் இருக்க வேண்டும். இது நியாயம் அப்பொழுதுதான் நல்ல திராட்சக் கனிகளைக் கொடுக்க முடியும். (யோவான் 15:8) நல்ல திராட்சைக் கனிகளை சுரைச்செடியில் எதிர்பார்க்க முடியாதது போல வேறு நாமம் தரித்த சபை யிலிருந்து கொண்டு கிறிஸ்துவின் சீஷராக இருக்க முடியாது. இயேசு சொன்னார் நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள் என்றார் (யோவான் 8:31) தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யம் திராட்சைக்கனிகளை கொடுக்கும் அதின் ஜனங்களுக்குரியதாகும் (மத். 21:43). எனவே நாம் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் இருப்போம்! அதிக கனிகளைக் கொடுப்போம்!!

# நாம் கனி கொடாத அத்தி மரங்களா?

சகோ. கிளிப்போர்டு டிக்ஸன்

அப்பொழுது அவர் ஒரு உவமையையும் சொன்னார். " ஒருவன் தன் திராட்சைத் தோட்டத்தில் ஒரு அத்தி மரத்தை நட்டிருந்தான். அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை. அவ்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்தி மரத்திலே கனியைத் தேடி வருகிறேன். ஒன்றையுங்காணவில்லை. இதை வெட்டிப் போடு, இது நிலத்தையும் ஏன் கொடுக்கிறது என்றான். அதற்கு அவன்: ஐயா இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதை சுற்றிலும் கொத்தி, எரு போடுவேன், கனி கொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப் போடலாம் என்று சொன்னான் என்றார் " (லூக்கா 13:6-9).

மற்றவர்களை விட தவங்களை மிகவும் நீதிமான்கள் என்றும் எனவே தாங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட தேவையில்லை என்றும் எண்ணிக் கொண்டிருந்த யூதர்களினிமித்தம் இந்த உவமையை நமது இரட்சகர் சொன்னார். விரைவில் அழிக்கப்படப்போகிற கனி கொடாத அத்தி மரமாக அவர்களைச் சித்தரிக்கிறார். இவ்வமையின் பாடம் அவர்களுக்கு மட்டுமல்ல நமக்கும் பொருந்தும். நான் ஒரு கனி கொடாத மரமா? என்ற கேள்ளவியை நம்மில் ஒவ்வொருவரும் கேட்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

1) இந்த மரமானது, திராட்சைத் தோட்டத்தில் தேர்ந்தெடுக்கப் பட்ட நல்ல ஒரு இடத்தில் நடப்பட்டிருந்தது. நமது வாழ்விலே உலகப் பூர்வமான ஆசீர்வாதங்கள் அநேகம் நமக்குத் தரப்பட்டுள்ளன. கிறிஸ்து நமக்காக மரித்து, இரட்சிக்கப்பட்டவர்களுக்கு இடமளிக்க தனது சபையை நிறுவி. நம்மை வழி நடத்த வேதாகமத்தை நமக்குத் தந்து தேவனுக்கு கீழ்ப்படிந்து அவருக்குப் பிரியமாய் நடக்கும் சந்தர்ப்பங் களையும் அளித்து நம்மை ஏராளமாக ஆசீர்வதித்துள்ளார். ஆகவே மனித னுக்குக் கிடைத்துள்ள எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும் தேவனுக்கு ஊழியஞ்செய்யக் கிடைத்துள்ள சந்தர்ப்பங்களுக்காகவும் நன்றி சொல்லித் தலைவணங்கி தேவனை ஏற்றுக்கொள்ளாத எந்த ஒரு மனிதனுக்கும் கனி கொடுக்கும் வாய்ப்பில்லை.

2) ஆம் நண்பர்களே, தேவன் தாம் சிறப்புக்கவனத்துடன் படைத்த மனிதனிடமிருந்து கனிகளை எதிர்பார்க்கிறார். மனிதனை பாவத்திலிருந்து இரட்சிக்கும் நோக்கத்துடன் அனுப்பி வைக்கப்பட்ட கிறிஸ்துவை யூத மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தால் கனியற்ற மரங்களாக்கி விட்டார். அதேபோல நாமும் கிறிஸ்துவையும் வசனத்தையும் உதறித்தள்ளினால் நாமும் கனி கொடுக்க முடியாதவர்களாகி விடுவோம்.

என்னில் நிலைத்திருங்கள் நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால், அது தானாய்க் கனி கொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத் திராவிட்டால், கனி கொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள் ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத் திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என இயேசு கூறினார் (யோவான் 15:4:5). இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு கீழ்ப்படியாமல் ஒருவன் எத்தகைய நற்கிரியைகளைச் செய்தாலும் தேவனிடத்தில் அவற்றிற்கு எதிர்பார்க்கிற பலன் கிடைக்காது (அப். 10:1,2,48) முதலில் ஒருவன் கிறிஸ்துவுக்குள் வரவேண்டும். கிறிஸ்துவுக்குள் வர ஒருவன் கிறிஸ்துவன் வார்த்தைகளைக் கேட்க விருப்பமுள்ளவனால் இருக்க வேண்டும். *"மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞான ஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட வேண்டும்."* (ரோமர் 6:4) இவைகளை ஒருவன் செய்யும்போது பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, பரிசுத்தமாகி நித்திய ஜீவனை அடைகிறான் (ரோமர் 6:22) தேவனுக்குக் கனிகொடுக்க வேண்டுமானால் கிறிஸ்துவுக் குள்ளாக வரவேண்டும், நண்பரே! நீங்கள் இதைச் செய்திருக்கிறீர்களா?

*3.* இந்த மூன்று வருடங்களாக இந்த மரத்திலே கனியைத் தேடி வந்தும் ஒன்றையும் காணவில்லை என தோட்டக்காரனைப் பார்த்து அதன் உரிமையாளன் கூறினான். இதை வெட்டிப்போடு; இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது! என்றான் அவன். தேவனுடைய படைப்பில் மனிதன் ஒருவனுக்கு மட்டுமே அழிவில்லாத ஆவி கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவன் அவனோடு தொடர்பு வைத்துக் கொள்ள விரும்புகிறார். மனிதன் எப்படி வாழவேண்டுமென தேவன் விரும்புகிறாரோ, அவற்றை வேதாகமத்தில் மனிதனுக்கு வெளிப் படுத்தியுள்ளார். இவைகளையெல்லாம் கவனியாது தேவனுடைய உபதேசங்களுக்கு எப்போது மனிதன் கீழ்ப்படியாமல் அசட்டை செய்கிறானோ அப்போது அவனது வாழ்க்கை கனி கொடாத வீணான ஒரு வாழ்க்கையாகிறது.

இயேசு கிறிஸ்துவின் விலை மதியாக இரத்தத்தால் மனிதனுடைய பாவங்களைக் கழுவி இரட்சிப்பு வழங்க தேவன் பாராட்டின அன்பையும் கரிசனையையும் சிந்தித்துப் பாருங்கள். அடுத்து கிறிஸ்துவின் மாசற்ற இரத்தத்தினால் கழுவப்பட மறுக்கும் மனு மக்களையும் நினைத்துப் பாருங்கள். பழைய ஏற்பாட்டு சாலமோன் ஞானி இவைபற்றி சுருங்கக் கூறியைக் கவனியுங்கள். காரியத்தின் கடைத்தொகையைக் கேட் போமாக தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைகொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. (பிரசங்கி 12:13)

பரிசுத்த ஆவியினால் மட்டுமல்ல, அக்கினியாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் இயேசு என்ற உண்மையை யோவான் கூறுகிறார். பின் கோதுமை (கனி கொடுக்கும் கிறிஸ்தவர்கள்) களஞ்சியத்தில் சேர்க்கப்படும், பதரோ (கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்கள்) அவியாத அக்கினியில் சுட்டெரிக்கப்படும் என்று விளக்குகிறார் (மத். 3:12).

4. தேவனுடைய வசனத்தைப் போதித்து, அதற்குக் கீழ்ப்படியத் தூண்டும் கிறிஸ்துவின் ஊழியர்கள் தோட்டக்காரனுக்கு ஒப்பிடப் பட்டுள்ளனர். கனி கொடுக்கச் செய்ய, மரத்தைச் சுற்றித் தோண்டி, எருப் போடுவது அவர்கள் பணி, நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டணம் பண்ணி கடித்து கொண்டு புத்தி சொல்லி திருவசனத்தைப பிரசங்கம் பண்ணுவதை இது குறிப்பிடுகிறது. (2 தீமோத். 4:2-3).

தவறான பாதையில் தாங்கள் நடந்து கொண்டிருப்பதை அறியாத வர்களையும் பாவப்பழக்கங்களை நேசிப்பவர்களையும் தெளிவாகப் போதிக்கப்படும் வசனங்கள் சுடுகின்றன. பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் பார்த்து, சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்கத் தூண்டியது வசனங்களை (அப். 2:37). வல்லமையான நற்செய்தி போதனை மக்களைக் கலங்கச்செய்தால் அதற்காகக் கவலைப்படாதீர்கள் ஏனெனில் அவர்கள் மனந்திரும்ப அது தேவையாக இருக்கிறது. மனிதர்கள் தேவனுக்காக கனி கொடுக்க வேண்டி, இந்தத் தூதர்கள் பரிந்து பேசுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். நான் பிராதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில் எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும். நம்முடைய இரசட்கராகிய தேவனுக்கு முன்பாக இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக் கிறார். (1 தீமோ. 2:1, 3,4) அவர்களின் பரிந்து பேசுதலின் விளைவாக, பாவியானவன் தேவனுக்குக் கீழ்ப்படியும் சந்தர்ப்பங்களுக்கான காலக்கெடு பலவேளைகளில் நீட்டிக்கப்படுகிறது.

லூக்கா 13:8,9 வசனங்களில் காணப்படும் அத்திரமத்திற்கு மீண்டும் ஒரு வருட அவகாசம் அளிக்கப்பட்டது போல, தேவனுடைய பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு. கனி கொடுத்தால் சரி; கொடாவிட்டால் இனி இதை வெட்டிப் போடலாம். ஒரு காலம் வரும், அப்போது பாவிக்கு வாழ்க்கை நீட்டிக்கப்படாமல் போகலாம். அப்போது அவனுடைய சிருஷ்டி கர்த்தாவை ஒரு கனி கொடாத மரமாக அவன் சந்திக்க வேண்டிய வரும், ஒரு நாள் நமது தேவனாகிய இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார்; அவ்வேளையில் கனி கொடாத மரங்கள் யாவற்றிற்கும் ஐயோ!

பொதுவாக இந்த உவமையானது விசுவாசமற்ற சபை உறுப்பினர் களுக்குப் பொருந்துவதாக இருப்பினும், பாவிக்கும் ஒரு நல்ல பாடத்தை இது கற்பிக்கத் கூடியதாக இருக்கிறது. ஏனெனில் பாவி தேவன் படைத்த இவ்வுலகில் வாழ்ந்து, அவர் தரும் காற்றை சுவாசித்து, இங்குள்ள சகல ஆசீர்வாதங்களையும் அனுபவித்து வருகிறான். அவனுடைய வாழ்க்கை பிறருடைய இருதயங்களைத் தொட்ட போதிலும், வருத்தப்படக் கூடிய காரியம் என்னவென்றால், கடவுளுக்கு அவன் கனி கொடாதவனாக இருக்கிறான். ஏனெனில், தேவனுக்குத் தன்னுடைய வாய்க்கையை அவன் அர்ப்பணிக்கவில்லை.

பாவியாகிய என் நண்பனே! கனி கொடுக்க இன்னும் உனக்கு காலம் இருக்கிறது. மனந்திரும்பி கர்த்தராகிய இயேசுவை அண்டிக் கொண்டு கனி கொடுப்பாயா?.

# கிறிஸ்துவும் அவருடைய சபையும்

Bro. வின்பெரட் கிளார்க்

சில மனிதர்களைப்பற்றி நாம் நினைக்கும் போது, அவர்கள் தொடர்பான வேறு சில காரியங்களும் நம் நினைவிற்கு வருகின்றன. நோவாவைப்பற்றி எண்ணும்போது பேழையும் நம் நினைவில் தோன்றுகிறதல்லா? அதுபோல கிறிஸ்துவை நாம் நினைக்கும் வேளையில் அவருடைய சபையும் நினைவுக்கு வர வேண்டும். அவருடைய நெஞ்சை முற்றியலுமாக நிறைத்திருந்தது சபை என்பதில் சந்தேகமில்லை. அதுபற்றி அவர் கூறுவதை மத்தேயு 16 ம் அதிகாரம் 16 முதல் 19 வசனங்களில் நாம் காணமுடிகிறது.

## I. சபைக்காக அவர் செலுத்திய விலையைப் பாருங்கள்

ஒரு பொருளுக்கு ஒருவர் தரும் மதிப்பு, அதற்கு அவர் கொடுக்க விரும்பும் விலையைப் பொறுத்துள்ளது என்பதை நாம் பொதுவாகக் கூறமுடியும். அப்பொருள் மதிப்பேறப்பெற்றது என அவர் கருதினால், எவ்விலையும் அதற்குத் தர தயாராக இருப்பார். அவர் பெரிதாகக் கருதும் அப்பொருளை அடைய தியாகம் செய்யவும் தயங்க மாட்டார்.

மேற்சொன்ன உதாரணம், நமது தேவன் சபையின் பேரில் வைத்திருந்த மதிப்பை நமக்கு ஓரளவு விளக்கக்கூடும். பவுல் கூறியதைக் கேளுங்கள். புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து... தம்மைத்தாமே அதற்கு ஒப்புக் கொடுத்தார் (எபே. 5:25, 27) எபேசு பட்டணத்து மூப்பர்களை நோக்கி பின்னொரு வேளையில் அவர் பேசும் போது, ...தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை.... (அப். 20:28) என்பதாகக் கூறினார். காசு பெறாத காரியத்திற்காக எவரும் இத்தகைய விலையைக் கொடுக்க மாட்டார்கள் என்பது திண்ணம். சபைக்காக மிகப் பெரிய ஒரு முதலீட்டை இயேசு செய்தார். ஆம், அவரிடமுள்ள சகலமும் அதற்கு விலையாகப் போயிற்று.

## II. சபைக்காக அவருடைய ஜெபத்தைக் கவனியுங்கள்

யோவான் 17 ம் அதிகாரத்தில் காணப்படும் அந்த மகத்தான ஜெபத்தைப் படித்துப் பார்க்கும் போது, சபை பற்றி தேவனுடைய உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் நாம் பார்க்க முடிகிறது. அந்த சீடர்கள் அவருடைய நினைவை நிறைத்து நின்றனர் என்பதை, அவர்களிடம் அவர் கூறிய யாவற்றையும் கவனித்தால் நமக்குப் புரியும்.

அவர்களுடைய தூய்மைக்காக அவர் ஜெபிக்கிறார். நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன் (யோவான் 17:15). உலகின் உப்பாக அவர்கள்

பயன்பட வேண்டுமென்பதை அவர் உணர்ந்திருந்தார். தூய்மையாகவும், சுத்தமாகவும் அவர்கள் விளங்க வேண்டிய அவசியமிருந்தது.

அவர்களுடைய ஒற்றுமைக்காக அவர் ஜெபிக்கிறார். அவர்கள் ஒன்றாயிருக்க நமது தேவன் அடிக்கடி ஜெபித்து வந்ததைக் காண முடிகிறது (யோவான் 17:11, 21) பிரிவினை விளைவிக்கும் மோசமான இடர்பற்றி அவர் அறிவார். விசுவாசமற்ற ஒரு உலகை உருவாக்குவதே பிரிவினையின் விலை என அவர் அறிவார். தகுதியற்ற, ஒரு பெரும் விலையை பிரிவினைக்குத்தரவேண்டியது வரும் என அவருக்குத் தெரியும்.

## III. சபைக்காக அவருடைய திட்டங்களைப் பாருங்கள்


இயேசு இவ்வுலகில் அவதரித்தபோதே சபைக்கான திட்டங் களோடு அவர் வந்தார் என்பதில் சந்தேகமில்லை. இவ்வுலகில் வந்தபின் தீட்டிய திட்டமல்ல அது. யூதர்கள் அவரை மீட்பராக ஏற்றுக்கொள்ள மறுத்த காரணத்தால் அது உருவாகவில்லை. அவருடைய தீவிர ஊழியக் காலத்தின் துவக்க முதல் அவர் செய்து வந்த சகல காரியங்களும் இதைத் தெளிவுப்படுத்துகின்றன. பரலோக இராஜ்யம் சமீபத்தில் இருக்கிறது என அவர் அறிவித்தார். (மத். 4:17) அவர் அவ்வாறு குறிப்பிட்டது சபையை யன்றி வேறு எதையும் அல்ல. வேறு எந்த ஒரு நிறுவனத்தையும் மனதில் நினைத்துக் கொண்டு அப்போது பேசவில்லை. என் பிதா எனக்கு ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்தினது போல, நானும் உங்களுக்கு ஏற்படுத்து கிறேன். நீங்கள் என் இராஜ்யத்திலே என் பந்தியில் போஜன பானம் பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர் களாய்ச் சிங்காசனங்களின் மேல் உட்காருவீர்கள் என்றார் (லூக்கா 22: 29-30). ஐயப்பாடு எதுவுமின்றி, இது கர்த்தரின் பந்தியைப் பற்றிக் கூறப் பட்டது. கர்த்தரின் பந்தி, சபை ஆராதனையில் இடம் பெறுவது நமக்குத் தெரிந்ததே (1 கொரி. 11:23-26). ஆனால், அது தனது இராஜ்யமும் சபையும் ஒன்றே என்பது தெளிவு. சபை, இராஜ்யம் என்ற ஒரே பொருளைக் குறிப்பதைக் காண்க. தனது சபையைக் கட்டுவதாகவும், இராஜ்யத்தின் திறவுகோல்களைத் தருவதாக அவர்களிடம் தெரிவித்த போதும், அவை இரண்டும் சபையைக் குறிப்பதை நாம் காண்கிறோம். தனது சபையயைக் கட்டும் திட்டத்தை அவர் ஏற்கனவே வைத்திருந்தார்.

## IV. சபைக்காக அவர் ஆயத்தப்படுத்திய இடத்தைப் பாருங்கள்

அவருடைய சீடர்களுக்கு ஒரு வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணப் போவதாக இயேசு கூறவில்லையா? (யோவான் 14:1-3) அவர்களுக்குப் பரலோகத்திலே ஒரு இடத்தை ஆயத்தப்படுத்தப் போவதாகச் சொன்னார். பவுல், தான் மரித்த பின்னர் கிறிஸ்துவுடனே கூட இருக்க ஆசைப்பட்ட போது, இதே இடத்தை மனதில் கொண்டு தான் அவ்வாறு கூறுகிறார் (பிலி. 1:21-23). சபைக்காக தேவன் ஒதுக்கிய இடத்தைப் பற்றி பவுல் அறிவார். இரட்சிக்கப்பட்ட சகல மக்களுக்கும் ஒதுக்கப்பட்ட வாசஸ் தலத்தில் அவருக்கும் ஒரு இடம் உண்டு. அதற்கு குறைந்த எதுவும் திருப்திப்படுத்தாது.


சபையைப் பற்றி பவுல் என்ன நினைத்தார் என்பதை நாம் அறிவோம். அதுபோலவே நாமும் நடப்போம். ❀

12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.
















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin in Tamil On Tamilan TV
**Monday 7:00 - 7:15 am**
**Thursday 9:30 - 10:00 pm**
**Saturday 7:15 - 7:30 am**




Arjunan In Tamil
**TV : Every Monday 6:00 - 6:15 am and**
**Every Saturday 6:15 - 6:30pm on Tamilan TV**
**Radio : Every Saturday 5:30- 5:45 pm on Sri Lanka Radio**

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
**Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on**
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam:
**Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV**

Philemon & Kingsley in Tamil:
**Tamilan Tv : Sunday 6:45 - 7:00 pm**
**Friday 6:00 - 6:30 am**



P.R. Swamy & Douglas:
**Every Sunday to Wednesday At 5:30 - 5:45 pm**
**on 25 And 49 Meter bend of Sri Lankan Radio**


Joshua & Ricky Gootam In Telugu:
**Every Saturday at 6:00 pm Subhavartha Channel**
**Every Wednesday at 6:30 pm on Rakshana Channel**
**Every Thursday at 11:00 am on Rakshana Channel**
**Satyavani T.V. online : www.sakthitv.in**
**Every Wednesday & Friday at 8.00 pm**


Thang Lien in Manipur:
**Hornbill Cable, Channel No.1**
**6:00 - 7:00 pm, Sunday, Tuesday, Thursday, Saturday.**


For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
**@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,**
**Arasaradi, Madurai - 625016**
**9244204420 / 21, 0452 - 2607026**


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017**


# எங்களது இதர வெளியீடுகள்













சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**
**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor: S. Rajanayagam